வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை


Email : news@eelanadu.lk | மலர் : 03 | 28.07.2022 வியாழக்கிழமை | இதழ் : 234 | பக்கங்கள் : 16

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி அரசியல் கைதிகளை விடுதலை செய்க

## ஜனாதிபதியை வலியுறுத்தி விக்னேஸ்வரன் எம்.பி. கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

ஐ. நா. சபைக்கு உறுதி கொடுத்ததன்படி இலங்கை பயங்கரவாத தடைச் சட்டத்தை மீளப்பெற வேண்டும். இதேநேரத்தில் இந்த சட்டத்தின்கீழ் தண்டனை பெற்றவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும். இல்லையெனில் 46 தமிழ் அரசியல் கைதிகளுக்கும் புனர்வாழ்வு வழங்கி விடுதலை செய்யவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கடிதம் மூலம் வலியுறுத்தியுள்ளார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் க.வி.விக்னேஸ்வரன் எம்.பி.

15

## நிறைவேற்றப்பட்டது அவசரகாலச் சட்டம்!

கொழும்பு, ஜூலை 28

அவசரகால சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை பாராளுமன்றத்தில் 57 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. அவசரகாலச் சட்டத்துக்கு ஆதரவாக 120 வாக்குகளும், எதிராக 63 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பதில் ஜனாதிபதியாகச் செயல்பட்ட வேளை, கடந்த ஜூலை 17ஆம் திகதி பொதுமக்கள் பாதுகாப்புச்

15

## எவருக்கும் சோரம் போகமாட்டோம் முதுகு எலும்புடன் செயல்படுவோம்!

### பாராளுமன்றில் செல்வம் எம். பி.

கொழும்பு, ஜூலை 28

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரான நாங்கள் எவ ருக்கும் சோரம் போகாமல் முதுகு எலும்புடன் செயல்படுவோம்.” - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளி கட்சியான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம். பி. தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் இன்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

15

## வடக்கின் உயர் அதிகாரிகள் நால்வர் உடன் பணிமாற்றம்!

யாழ்ப்பாணம், ஜூலை 28

வடக்கு மாகாண சபையின் நிர்வாகத்தின் கீழ் உள்ள உயர் அதிகாரிகள் நால்வருக்கு பணிமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன், வடக்கு மாகாண பேரவைச் செயலகச் செயலாளர் செந்தில்நந்தனன், மாகாண கட்டடங்கள் திணைக்களப் பணப்பாளர் எஸ். மோகனதேவன், வடக்கு மாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் சிவகுமார் ஆகியோருக்கே பணிமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நால்வரும் வடக்கு மாகாண நிர்வாகத்திலிருந்து விடுவிக்கப்பட்டு மத்திய அரச நிர்வாகச் செயல்பாட்டுக்கு உள்வாங்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பணியிடமாற்றல் எதிர்வரும் முதலாம் திகதி முதல்

15

## கடத்தல் பாணியில் போராட்டக்காரர் கைதானார்!

கொழும்பு, ஜூலை 28

பொலிஸ் தலைமையகத்துக்கு அண்மையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பில் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் ஒன்றியம் மற்றும் கோட்டா கோ கமவின் செயல்பாட்டாளரான

15

## ஊசி மூலம் ஹெரோயின் ஏற்றிய இளைஞர் மரணம்!

### ஒரு வாரத்தில் யாழில் 2ஆவது சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

ஊசி மூலம் ஹெரோயின் போதைப் பொருளை எடுத்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். திருநெல்வேலி - பாரதிபுரத்தை சேர்ந்த 23 வயது இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்தில் ஒரு வாரத்தில் இடம்பெற்ற இரண்டாவது போதை ஊசி மரணம் இதுவாகும். நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த மரணம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்த இளைஞர் போதைப் பொருளுக்கு அடிமையான நிலையில் அவருக்கு

15

## புலம்பெயர் தமிழர் தலைவர்களுடன் வெளிப்படையாக பேசுவதற்கு தயார்

### நீதி அமைச்சர் விஜயதாஸ அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 28

தமிழர்கள் மத்தியில் தீர்க்கப்படாத பல பிரச்னைகள் உள்ளன என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். பேச்சுகளின் ஊடாக தமிழர் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பது அவசியம். எதிர்கால தலைமுறையினருக்கு இப்பிரச்னைகளை மீதப்படுத்தகூடாது என்பதை தமிழ் அரசியல் தரப்பினர் விளங்கிக்கொள்ள வேண்டும். புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் தலைவர்களுடன் வெளிப்படை தன்மையுடன் பேச்சில் ஈடுபட தயார் என

15

## கொரோனாவுக்கு நால்வர் பலி; 154 தொற்றாளர் அடையாளம்!

கொழும்பு, ஜூலை 28

கொரோனா தொற்றால் இரு பெண்கள் உட்பட 4 பேர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தனர். அத்துடன், நேற்றைய தினம் 154 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டில் நேற்றுமுன் தினம் கொரோனா தொற்றால் 30 - 59 வயதுக்கும் இடைப்பட்ட பெண் ஒருவரும் 60 வயதுக்கு மேற்பட்ட இரு ஆண்களும் ஒரு பெண்ணும் அடங்குவர். இதன்படி, நாட்டில் பதிவான மொத்த கோவிட் -19 இறப்புகளின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 548 ஆகும்.

இதேவேளை,

15

## அமைச்சு பதவிக்காகக் கொள்கையை ஒருபோதும் விட்டுக்கொடுக்கமுடியாது

### சபையில் சஜித் பிரேமதாஸ திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை. 28

“மக்களை ஒடுக்கும் இந்த அரசுடன் எமக்கு கொடுக்கல், வாங்கல் இல்லை. அரசில் இணைய மாட்டோம். அமைச்சு பதவிகளுக்காக கொள்கைகளை விட்டுக்கொடுக்க முடியாது. அவ்வாறான தொரு நிலை ஏற்பட்டால் அரசியலில் இருந்து ஒய்வு பெறுவேன்.”

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டம் தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பாராளுமன்ற குழுக்களில்

15

## சமஷ்டி அரசியலமைப்பை ஏற்படுத்துங்கள் நாட்டை சேர்ந்து அபிவிருத்தி செய்வோம்!

### அரசைக் கேட்கிறார் கஜேந்திரன் எம். பி.

கொழும்பு, ஜூலை 28

“பிரச்னைகளுக்குத் தீர்வு காண வேண்டுமாயின் தேர்தலுக்கு செல்லுங்கள். தமிழ்த் தேசத்தை அங்கீகரிக்கும் வகையில் சமஷ்டி அரசமைப்பைக் கொண்டு வாருங்கள். அப்போது நீங்களும் நாங்களும் சேர்ந்து நாட்டை அபிவிருத்தி செய்யலாம்.”

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற அவசரகால ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

தமிழகத்திலிருந்து ஊடக நண்பர் ஒருவர் தொலைபேசியில் தொடர்புகொண்டார். ஈழப்போராட்டம் (ஆயுதப் போராட்டம்) ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து ஈழத்து அரசியலோடு நெருக்கமான தொடர்பில் இருப்பவர் அவர்.

சீனத் தூதரகத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் இரகசிய விஜயம் மேற்கொண்ட செய்தியை "ஈழநாடு" நேற்று முன்தினம் பிரசுரித்திருந்தது. அதுதொடர்பாக விலாவாரியான விபரங்களை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் மற்று மொரு பத்திரிகையும் வெளியிட்டிருந்தது.

இந்தச் சந்திப்பு நடந்தது பல நாட்களுக்கு முன்னர். வழக்கமாக தூதரகங்களுக்குச் செல்லும் கூட்டமைப்பு எம். பிக்கள் தமது தூதரக சந்திப்புக்களை ஊடகங்களுக்கு வெளியிடுவதுண்டு. ஆனால், இந்தச் சந்திப்பு பற்றிய செய்திகள் ஏனோ வெளியிடப்படவில்லை.

இலங்கையில் நடக்கின்ற ஒவ்வொரு சம்பவங்களுமே ஏதோ ஒருவகையில் சர்வதேச நாடுகளின் விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையிலேயே நடந்து வருவதும் இரகசியமானதல்ல.

இந்நிலையில், சுமந்திரன் அன் கோ, சீன தூதரகத்துக்கு சென்று வந்த பின்னரே கூட்டமைப்பு, ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது குறித்து ஆராய்ந்திருந்தது.

அந்தக் கூட்டத்தில், சர்ச்சைக்குரிய வகையில் இந்திய தூதரக அதிகாரி இழுத்துவிடப்பட்டதும், அதனால் ரணில் - இந்திய உறவில் சிறிய நெருடல் ஏற்பட்டதும் தெரிந்த சங்கதிதான்.

அவ்வாறெனில், இந்தியாவோடு ரணிலுக்கிருக்கும் நல்லுறவை குழப்புவதற்கு சீன தூதரகத்தில் வரைபடம் போடப்பட்டதா என்ற சந்தேகம் இந்தியாவுக்கு ஏற்பட்டிருப்பதாக அந்த இந்திய ஊடகர் கேள்வி எழுப்பிய போது தான், முடிச்சுக்கள் கட்டவிழ்வதுபோல இருந்தன.

கூட்டமைப்பு கூட்டத்தில், இந்திய தூதரக அதிகாரி செல்வாக்குச் செலுத்திய விவகாரம் ரணிலை குழப்பத்தில் ஆழ்த்தியது என்னவோ உண்மைதான். ஆனால், இதனால் இந்தியாவுடன் அவருக்கு இருக்கும் உறவு முறிந்துவிட்டது என்றோ அல்லது முறிந்துவிடும் என்றோ நிச்சயம் நம்ப முடியாது.

ஆனால், தமிழகத்திலிருந்து பேசிய அந்த ஊடகர் கேட்ட கேள்வி நியாயமானதுதான்.

சுமந்திரனுடனான சந்திப்பு நடந்த பல நாட்களின் பின்னர், அந்தச் சந்திப்பு பற்றிய செய்தியை சீன தூதரகம் ஏன் இப்போது கசியவிட்டது என்ற அவரின் கேள்விக்கு என்னிடம் பதில் இருக்கவில்லை.

சீனத் தூதுவர் சில மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது, ஈழநாடு ஆசிரியர் பீடத்தினரையும் தனியாக சந்தித்திருந்தார். அந்தச் சந்திப்பின் போதும், தாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்திக்கப் பல தடவைகள் முயன்றபோதிலும் கூட்டமைப்பு தலைமையிடம் இருந்து சம்பிரதாயத்துக்கேனும் ஒரு பதில் தரப்படவில்லை என்ற விடயத்தை தூதுவர் திரும்பத் திரும்ப கூறியது ஞாபகத்துக்கு வருகின்றது.

அவர்கள் ஏன் தங்களை சந்திக்க மறுக்கின்றனர் என்ற கேள்வி அவருக்குள் இருந்தது.

இப்படியிருந்தும் சுமந்திரன், சாணக்கியன் இருவரும் இரகசியமாக சந்தித்ததும், அதுவும் ஜனாதிபதி வேட்பாளரான டலஸ் அழகப்பெரும சீன தூதரகம் சென்றுவந்த சில தினங்களில் இவர்கள் சென்றதும் ஏன் என்பது தெரியவில்லை.

ஆனால், யாரை ஆதரிப்பது என்ற கலந்துரையாடலில் டலஸை ஆதரிக்கவேண்டும் என்பதில் சுமந்திரன் பிடிவாத மாக இருந்ததும், அதற்காக என்ன விலை கொடுத்தேனும் அந்த முடிவை எடுக்க முயன்றதும் பகிரங்கமானவை.

இந்திய தூதரக அதிகாரியை இந்த விடயத்தில் இழுத்துவிட்டதால், இந்திய தூதரகத்தை தமிழர் தரப்பு அணுகமுடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இந் நிலையில், இவையெல்லாம் சீன தூதரகத்தின் பின்னணியில்தான் நடந்தன என்ற தகவலை வெளியிடுவதன் மூலம் இந்தியத் தூதரகத்தின் கதவுகளை நிரந்தரமாக தமிழர்களுக்கு மூடுவதற்காக-

சீன தூதரகத்திற்குள் போவோர் வருவோரையெல்லம் நோட்டம் விட்டுக்கொண்டிருக்கும் இலங்கை உளவுத் துறைதான் இதனை கசியவிட்டதா என்றும் கேட்காமல் இருக்கமுடியவில்லை.!

- ஊர்க்குருவி

# மொட்டுக் கட்சி உறுப்பினர்மீது அழுகிய முட்டை வீசி தாக்குதல்!

அநுராதபுரம், ஜூலை 28

அநுராதபுரம் மாநகர சபை ஊழியர்களின் அழுகிய முட்டை தாக்குதல் மற்றும் எதிர்ப்புக்கு மத்தியில் மொட்டுக் கட்சியின் உறுப்பினர் திருமதி சுரங்கி ரேணுகா சமரதுங்க நேற்று பொலிஸாரால் மீட்கப்பட்டார்.

நேற்று முன்தினம் மாநகர சபையின் மேயர் எச். பி. சோமதாச தலைமையில் நடைபெற்ற நிதிக்குழு கூட்டத்தில் மாநகர ஆணையாளர் ருவன் விஜயசிங்கவுடன் மொட்டுக் கட்சி உறுப்பினர் ரேணுகா முறுகலில் ஈடுபட்டதுடன், அவரை மோசமான வார்த்தைகளால் திட்டி பாதணியால் தாக்கினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், நேற்றுக் காலை மாநகர சபைக்கு வந்த குறித்த பெண் உறுப்பினர் அலுவலகத்தில் காத்திருந்த போது, மாநகர சபையின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அவருக்கு எதிராக கோஷமிட்டனர். அத்துடன், அவரை அங்கிருந்து செல்லுமாறு தெரிவித்துள்ளனர்.

ஆனால், அவர் அலுவலகத்தில்தொடர்ந்து இருந்ததால், ஊழியர்கள் கோபமடைந்ததுடன் அவரை அமர்ந்திருந்த நாற்காலியுடன் தூக்கிக் கொண்டு கீழ் தளத்திற்கு கொண்டு சென்றனர். இதனால் அங்கு பதற்றமான சூழல் உருவாகியிருந்தது.

மாநகர சபையின் நுழைவாயிலுக்கு முன்பாகக் கூடிய ஊழியர்கள் மொட்டுக் கட்சியின் பெண் உறுப்பினருக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதன் போது குறித்த பெண் உறுப்பினர் மாநகர சபை உழியர்கள் தன்னைத் தாக்கினர் என்று அழுதுள்ளார். ஆனால், ஊழியர்கள் அவருக்கு எதிராகப் போராட்டம் நடத்தியதுடன் அவர்மீது அழுகிய முட்டைகளால் தாக்குதலும் நடத்தியுள்ளனர்.

இதற்கு மேலாக மாநகர ஆணையாளர்மீது தாக்குதல் நடத்தியதற்கு ஆணையாளரிடம், இந்தப் பெண் உறுப்பினர் மன்னிப்பு கேட்க வேண்டும் என ஊழியர்கள் கோஷமிட்டுள்ளனர். இந்த நிலையில், அங்கு நிலைமை மோசமாக குறித்த பெண் உறுப்பினர் ஆணையாளரிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆனால், அவர் மீது ஊழியர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வந்த நிலையில் அநுராதபுரம் பொலிஸ் நிலைய பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மாநகர சபைக்கு விரைந்து குறித்த பெண் உறுப்பினரை அங்கிருந்து பாதுகாப்பாக அழைத்துச் சென்றுள்ளனர். (ஐ)

# சலுகைகள், பதவி காட்டி எம்மைக் கவர முடியாது!

## எரான் விக்கிரமரத்ன கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 28


அரசாங்கத்தை கைப்பற்றத் தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் இணையுமாறு அழைப்புகள் தொடர்ந்தும் வருகின்றன. எனினும் சலுகைகள் மற்றும் பதவிகள் மூலம் தம்மை கவர முடியாது எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முதலில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்து தேர்தலை நடத்துவதற்கு இணக்கம் காணப்பட வேண்டும்.

சில நிபந்தனைகளின் கீழ் ஆட்சியை பொறுப்பேற்க தயாராக இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமும் நாம் கூறியிருந்தேன்.



மனித உரிமைகளைப் புறக்கணித்தும், ஊடகங்களை நசுக்குவதன் மூலமும் முன்னேறிச் செல்ல முடியாது.

21 ஆவது திருத்தத்தை நிறைவேற்றி போராட்டக்காரர்களின் கோரிக்கைக்கு செவி சாய்த்தால் இந்த அரசாங்கதிற்கு ஆதரவு வழங்க நாம் தயார்.

அரசாங்கத்தில் இணையுமாறு அழைப்புகள் தொடர்ந்தும் வருகின்றன. எனினும் சலுகைகள் மற்றும் பதவிகள் மூலம் தம்மை கவர முடியாது- என்றார். (அ)

# யோகக் கலை வகுப்புகள்!

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ். யோக வித்யா பீடத்தால் இலவசமாக யோகக்கலை வகுப்புகள் திருநெல்வேலி வடக்கு பழங்கிணற்றடி பிள்ளையார் ஆலய திருமண மண்டபத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் 6ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை நடைபெறும்.

இந்த வகுப்புகளில் 19 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் கலந்துகொண்டு பயிற்சி பெறமுடியும். சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இந்த அடிப்படைக் கற்கைநெறியை பயில விரும்பும் ஆர்வமுள்ளவர்கள் ஓகஸ்ட் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு நேரில் வந்து பதிவுகளை மேற்கொண்டு இணைய முடியும்.

மேலதிக தகவல்களை 077 104 1455 எனும் கைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# விமானத்தில் கைதான தனிஸிடம் சி.ஐ.டியினர் தீவிர விசாரணைகள்

கொழும்பு, ஜூலை 28

இம்மாதம் 13ஆம் திகதி, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்குள் பலவந்தமாக நுழைந்து, ஒளிபரப்புக்கு இடையூறு ஏற்படுத்தியமை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட காலிமுகத்திடல் போராட்டக்காரர் தனிஸ் அலி என்பவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

டுபாய் செல்ல முயற்சித்த நிலையில், கட்டுநாயக்க விமான நிலையத்தில் விமானத்தினுள் வைத்து குற்றப் புலனாய்வு பிரிவினரால் அவர் நேற்று முன்தினம் மாலை கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய குறித்த நபரை தீவிர விசாரணைக்கு உட்படுத்த குற்றப் புலனாய்வுப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

கொழும்பு, கோட்டை மற்றும் காலிமுகத்திடல் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் அடிப்படையில், கடந்த 13ஆம் திகதி சில தரப்பினர் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்குள் பலவந்தமாக நுழைந்து ஒளிபரப்புக்கு இடையூறு ஏற்படுத்தியிருந்தனர்.

இந்த விடயம் தொடர்பில், குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (அ)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
28.07.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஆடி 12

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

# கூட்டமைப்பின் இராஜதந்திர நம்பகத்தன்மை ?

தமிழ் மக்கள் ஒரு அரசு இல்லாத தரப்பு. அரசு இல்லாத தரப்புக்களுக்கான இராஜதந்திர வாய்ப்புக்கள் மிகவும் பலவீனமானவை. இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்றவை எனக் கூறப்படும், மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் போர்க் குற்றச்சாட்டுக்கள்தான், தமிழ் மக்களுக்கான அரசியலை சர்வதேச அரங்கு களில் நீர்த்துப்போகாமல் பாதுகாத்துவருகின்றன. கொழும்பின் விடாப்படியான அணுகுமுறைகளும் இதற்கொரு காரணமாகும். கொழும்பின் ஆட்சியாளர்கள் சில விடயங்களில் முன்னேற்றத்தை காண்பிப்பார்களாயின், சர்வதேச அவதானமும் நாளடைவில் நீர்த்துப் போய்விடும். இன்றைய நிலையில், தமிழர் களின் சர்வதேச குரலாக தொழில்படும் புலம்பெயர் சமூகமும் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கை செலுத்திவருகின்றது.

ஆனால், மறபுறமாக தாயகத்தில் இயங்கும் அரசியல் தரப்புக்களின், இராஜதந்திர அணுகுமுறைகள் எவ்வாறிருக்கின்றன? சில தினங்களாக இடம் பெற்ற சம்பவங்களின் அடிப்படையில் சிந்திப்பதாயின், 'பனையால் விழுந்த வரை மாடு ஏறி மிதித்த' - கதையாகவே தமிழ் தேசியவாத தரப்புக்களின் இராஜ தந்திர அணுகுமுறை இருக்கின்றது. ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பின்போது, ஏற்பட்ட சில சம்பவங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இராஜதந்திர நம்பகத் தன்மையை கேள்விக்குறியாக்கியுள்ளது. எமக்கு கிடைக் கும் தகவல்களின்படி, இந்திய தூதரக சர்ச்சையால், ஏனைய இராஜதந்திரிகள் அதிருப்தி அடைந்திருக்கின்றனர். அவர்கள் மத்தியில், கூட்டமைப்பின் நம்பகத்தன்மை, பெரியளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

இராஜதந்திர தொடர்புகள் என்பவை பரஸ்பர நம்பகத்தன்மையின் அடிப்படையில் இடம்பெறும் விடயங்களாகும். நம்பகத்தன்மை போய்விட்டால், அதன் பின்னர் அதனை மீளவும் கட்டியெழுப்புவது மிகவும் சவாலானதொரு விடயமாகும்.

2009இற்கு பின்னரான காலத்தில், சம்பந்தன் தலைமையில் கடந்த 13 வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட அரசியல் முன்னெடுப்புக்களில், பல்வேறு இராஜதந்திர சறுக்கல்கள் இடம்பெற்றிருக்கின்றன. இதில், பாரதூரமானது இந்திய பிரதமர் சிறி நரேந்திர மோடியுடனான சந்திப்பை அற்ப காரணங்களை கூறி நிகராகரித்தமை. கடவுசீட்டைக் காணவில்லை, தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவின் மகனின் திருமணம் என்று கூறியே, சம்பந்தன் அதனை நிராகரித்திருந்தார். 134 கோடி மக்களின் தலைவர், உலகளவில் செல்வாக்குமிக்க தலைவர்களில் ஒருவர், தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்கியபோது, அதனை ஒருவர் நிராகரிக்கின்றார் என்றால், அவரின் இராஜந்திர ஆற்றல் தொடர்பில் என்ன கூறமுடியும்?

சில மாதங்களுக்கு முன்னர், கூட்டமைப்பின் நிபுணர் குழுவென்னும் பெயரில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு, சுமந்திரன் தலைமையில், மூவரடங்கிய குழுவினர் சென்றிருந்தனர். அதில் சென்ற இருவர், நாடு திரும்பியதும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பேசியதில்லை. அவர்கள் எதற்காக சென்றார்கள் என்று அவர்களுக்கே தெரியாது. இந்தப் பயணம் தொடர்பில் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு தெரியப்படுத்தப் படவில்லை. நாடு திரும்பியதைத் தொடர்ந்து, ஜனவரி மாதம் நடுப்பகுதிக்குள் அமெரிக்கா கடுமையான முடிவுகளை எடுக்கவுள்ளதாகக் கூறப்பட்டது. ஆனால், அப்படியெதுவும் இடம்பெறவில்லை. ஏனெனில், அனைத்துமே தேர்தல் பிரசார நோக்கம் கொண்ட கதைகளேயேன்றி உண்மைகளல்ல.

இப்போதும் தங்களுடைய திட்டம் வெற்றியளிக்க வேண்டும் என்பதற்காக, இராஜதந்திர தொடர்புகள் தவறாக பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. சீனத் தூதரக சந்திப்பு தொடர்பில் கூட்டமைப்பில் எவருமே தெரிந்திருக்கவில்லை. உண்மையில், என்ன அடிப்படையில் இராஜதந்திரிகளை கூட்டமைப்பின், பாராளுமன்ற உறுப்பினர்கள் அணுகுகின்றனர்? கூட்டமைப்பின் இராஜதந்திர தொடர்புகள் எவருடைய அனுமதியின் கீழ் கையாளப்படுகின்றன? பதில் இலகுவானது. கூட்டமைப்பில் இராஜதந்திர நெறிமுறையென்று ஒன்றில்லை. தனிப்பட்ட நபர்களின் விருப்புவெறுப்புக்களின் அடிப்படையிலேயே அனைத்தும் இடம்பெறுகின்றன. கூட்டமைப்பில் அக்கறையுள்ளவர்கள், இந்த நிலைமையை மாற்றியமைப்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

# சீரமைக்கப்பட வேண்டிய நிலை இலங்கையின் வெளிவிவகாரத்துறை!

**அலசுவது இராஜதந்திரி**

*இலங்கையின் பொருளாதார, அரசியல் நிலவரங்கள் மிகவும் ஆட்டம் கண்டுள்ள நிலையில் வெளிநாடுகளின் உதவிகளிலேயே இலங்கை பெரிதும் தங்கியிருக்க வேண்டிய சூழ்நிலை தோன்றியுள்ளது.*

*இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள மிக மோசமான பொருளாதார நிலவரம் உள்நாட்டு பொருளாதார, அரசியல் நிலவரங்களை சீர்படுத்த வேண்டிய நிர்ப்பந்தங்களை உருவாக்கியுள்ள அதேசமயம் வெளியுறவுக்கொள்கையை ஒழுங்கமைக்காதபட்சத்தில் இலங்கை மோசமான இடர்பாடுகளை சர்வதேச மட்டத்திலும் எதிர் நோக்க வேண்டிய நிலையே ஏற்படும்.*

*முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இரு வருடங்களுக்கு முன்னர் பதவிக்கு வந்ததுமே நிபுணத்துவ ரீதியான வெளிநாட்டு இராஜதந்திரிகளை வெளிவிவகாரத்துறையில் பதவியிலமர்த்துவதைவிடுத்து இராணுவப் பின்னணியைக் கொண்டவர்களை வெளிவிவகார நடவடிக்கைகள் தொடர்பில் நியமித்திருந்தார்.*

*முன்னாள் கடற்படை தளபதியான ஜயந்த கொலம்பகேயை வெளிவிவகார செயலாளராக நியமித்தமை இதற்கு நல்ல உதாரணமாகும். ஆயினும், அண்மையில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியையடுத்து அட்மிரல் கொலம்பகே வெளிவிவகாரச் செயலாளர் பதவியிலிருந்து அகற்றப்பட்டு வெளியுறவுத் துறையைச் சேர்ந்த அனுபவஸ்தரான திருமதி. அருணி விஜயவர்த்தன அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.*

*இலங்கையைப் பொறுத்தவரை அயல் நாடான இந்தியாவுடனான வெளியுறவு நெருக்கமானது எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வப்போது ஏற்றஇறக்கங்களை கொண்டதாகவே அமைந்திருந்தது.*

*இதுதவிர, 1987ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இலங்கை-இந்திய அமைதி ஒப்பந்தத்தையடுத்து இந்திய - இலங்கை அயலுறவு வெளிப்பார்வைக்கு காத்திரமானது போன்று தென்பட்டாலும் பெரிதும் உறுதிப்பாடற்ற நிலையிலிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.*

*இலங்கையில் கடந்த ஏப்ரல் மாதம் முதல் வெளிப்பட ஆரம்பித்த பொருளாதார நெருக்கடி பின்னர் படிப்படியாக அதிகரித்து பொருளாதாரத்தின் உயிரோட்டமாக இருக்கின்ற எரிபொருள் தேவைக்கும் இந்தியாவையே தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு இலங்கை உள்ளாகியிருக்கின்றது.*

*தற்போதைய நெருக்கடியான காலகட்டத்தில் இந்தியாவே இலங்கைக்கு பெரிதும் உதவியுள்ளதை இலங்கையின் தற்போதைய மத்திய வங்கி ஆளுநரான கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். கூடவே சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொண்டால் மட்டுமே சர்வதேச சமூகம் இலங்கைக்கு உதவ முன்வருமெனவும் மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.*

*இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அயலுறவுக் கொள்கையை காத்திரமடையச்செய்ய வேண்டியவராக இருக்கின்றார். ஏனெனில், இலங்கை தற்போது வெளிநாட்டு உதவிகளுக்காக கடலையும் , ஆகாயத்தையும் பார்த்திருக்க வேண்டிய நாடாக இருக்கின்றது.*

*இலங்கை வெளிநாட்டுக் கடன்களை பெறுவதாயின் ஏற்கனவே பெற்றுக்கொண்ட கடன்களை மீளவும் செலுத்துவதற்கான பொருளாதார உறுதிப்பாட்டை ஓரளவாவது கொண்டிருக்க வேண்டும். ஆனால், அத்தகைய ஒரு தன்மையில் இலங்கை தற்போது காணப்படவில்லை.*

*இதேவேளை இலங்கையின் இராஜதந்திர மட்டத்திலான வெளியுறவுக் கொள்னையை எடுத்து நோக்கும் பட்சத்தில் கௌரவத்துக்குரிய நிலையிலிருந்தும் இலங்கை தாழ்வு நிலையை எட்டியுள்ளதையே சர்வதேச சமூகத்தின் தற்போதைய இலங்கைமீதான பார்வை மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.*

*சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்னர் இலங்கை சர்வதேச சமூகத்தினால் பெரிதும் மதிக்கப்பட்டிருந்தது. ஆளுமையுள்ளவர்களாக அரச தலைவர்கள் வெளி நாட்டமைச்சர்கள் ஆகியோர் விளங்கியிருந்தனர்.*

*அணிசேரா அமைப்பு , பொதுநலவாய அமைப்பு, தெற்காசிய பிராந்திய நாடுகளின் அமைப்பு (சார்க்) போன்றவற்றில் இலங்கை பிரபலம் பெற்றிருந்தது. நூற்றுக்கும் மேற்பட்ட உலகத்தலைவர்களை வரவேற்று கொழும்பில் 1976ஆம் ஆண்டு அணிசேரா உச்சி மகாநாட்டையும் இலங்கை நடத்தியிருந்தது.*


*அத்துடன், சார்க் அமைப்பின் ஆரம்பத்துக்கும் இலங்கை பெரும் பங்களிப்பை வழங்கியிருந்தது. ஆனால், இன்று புதிய உலகமயமாக்கலின் கீழ் இலங்கை தனது வெளிவிவகார விடயங்கள் குறித்து தன்னைத் தானே தாழ்த்திக்கொண்டுள்ள நிலையே காணப்படுகின்றது.*

*நாற்பது வருடங்களுக்கு முன்பிருந்தது போலன்றி இன்று உலகளாவிய ரீதியில் இலங்கைத் தமிழர்கள் செறிந்து வாழ்கின்றனர். அவர்கள் தாம் வாழுகின்ற நாடுகளில் அரசியல், பொருளாதார ரீதியாகவும் செல்வாக்கு செலுத்திவருகின்றனர்.*

*இதற்கு ஒரு நல்ல உதாரணமாக முன்னாள் ஜனாதிபதி இலங்கையிலிருந்து வெளியேறியுள்ள போதிலும் அவருக்கு ஐரோப்பா செல்வதோ அல்லது தற்போது அவர் தங்கியுள்ள சிங்கப்பூரில் நீண்ட நாட்கள் தங்குவதோ பலத்த எதிர்ப்புகளால் சாத்தியப்படாத விடயமாகவே இருக்கின்றது.*

*இத்தகைய பின்னணியில் இலங்கை தனது வெளிவிவகார கொள்கையை சீர்செய்வதற்கு இலங்கையில் அடிப்படை அரசியல் பிரச்னையாக இருக்கின்ற வடக்கு - கிழக்கு தமிழர் பிரச்னைக்கு நிரந்தர தீர்வுகாண்பதன் மூலமே வழியமைக்க முடியும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜூலை - 28 வியாழக்கிழமை
சுபகிருது வருடம் - ஆடி 12
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : அமாவாசை




**மேடம்**
நினைத்ததை நிறைவேற்றி மகிழ்வீர்கள். எதிர்பார்த்த வருவாய் வந்து சேரும். நண்பர்கள் ஒத்துழைப்புடன் உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். வருவாய் அதிகரிக்கும்.

**இடபம்**
கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும்.வியாபாரத்தில் திருப்பம் உண்டாகும். எதிர்பாராத லாபம் ஏற்படும். நிதிநிலை உயரும்.

**மிதுனம்**
புதிய முயற்சிகள் இழுபறியாகும். செயல்களில் தடுமாற்றம் உண்டாகும்.உங்கள் எதிர்பார்ப்புகள் தள்ளிப் போகும். மனதில் குழப்பம் ஏற்படும். பணியில் கூடுதல் கவனம் தேவை.

**கடகம்**
உறவினர்களால் சில சங்கடங்களுக்கு ஆளாவீர்கள். செலவு அதிகரிக்கும்.கணவன் மனைவிக்குள் பிரச்னைகள் தோன்றும். வார்த்தைகளில் கவனம் தேவை. பணியில் நெருக்கடிகளை சந்திப்பீர்கள்.

**சிம்மம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உங்கள் விருப்பம் ஒன்று நிறைவேறும். தடைபட்ட செயல்கள் நிறைவேறும். நிலுவை பணம் வந்து சேரும்.

**கன்னி**
வியாபாரத்தில் உங்கள் அணுகுமுறை வெற்றி தரும். லாபம் அதிகரிக்கும்.பணி புரியும் இடத்தில் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள். மதிப்பு உயரும். புதிய முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**துலாம்**
உங்கள் அணுகுமுறையால் நீண்டநாள் பிரச்னையில் தீர்வு உண்டாகும்.குடும்பத்தில் ஏற்பட்ட நெருகடிகள் விலகும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பணியில் ஏற்பட்ட பிரச்னை முடிவிற்கு வரும்.

**விருட்சிகம்**
பழைய பிரச்னை ஒன்று மீண்டும் தலையெடுக்கும். குழப்பம் தோன்றும். எதிர்பார்த்த ஒன்று இழுபறியாகும். வீண் அலைச்சல், செலவு உண்டாகும். பயணத்தில் கவனம் தேவை.

**தனுசு**
உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும். நண்பரால் ஆதாயம் காண்பீர்கள். குடும்பத் தேவையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்கள் உங்களைத் தேடி வருவார்கள்.

**மகரம்**
வியாபாரத்தில் நெருக்கடி விலகும். மறைமுகத் தொல்லை அகலும்.வழக்கு உங்களுக்கு சாதகமாகும். விரோதிகள் விலகிச் செல்வார்கள். பணியில் உங்கள் நிலை உயரும்.

**கும்பம்**
பிள்ளைகளின் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். பொன் பொருள் சேரும்.உறவினர்களால் ஏற்பட்ட தொல்லை விலகும். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். நீண்டநாள் எண்ணம் நிறைவேறும்.

**மீனம்**
எதிர்பார்ப்பு நிறைவேறும். நீங்கள் விரும்பிய ஒன்றை போராடி அடைவீர்கள்.பணியிடத்தில் சில சங்கடங்களை சந்திப்பீர்கள். அமைதி காப்பது நல்லது.வியாபாரத்தில் கூட்டாளிகளால் ஏற்பட்ட பிரச்னைகளுக்கு முடிவு காண்பீர்கள்.

# இன்று வருகிறார் பிரதமர் மோடி; ஐந்து அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடு

சென்னை, ஜூலை 28

செஸ் ஒலிம்பியாட் தொடக்க விழாவில் கலந்துகொள்ள பிரதமர் மோடி வருவதை யொட்டி, சென்னையில் 22,000 பொலிஸ் அதிகாரிகள் மற்றும் ஆய்வாளர்களுடன் 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பிரதமர் நரேந்திர மோடி இன்று வியாழக்கிழமை நேரு உள் விளையாட்டரங்கில் நடைபெறும் 44ஆவது செஸ் ஒலிம்பியாட் தொடக்க விழாவில் கலந்து கொள்கிறார். இதனைத் தொடர்ந்து நாளை வெள்ளிக்கிழமை அண்ணா பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்கிறார். இதனையொட்டி சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து சென்னை பெருநகர பொலிஸ் ஆணையர் சங்கர் ஜிவால் தலைமையில், அனைத்துக் பொலிஸ் அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதன்படி, பொலிஸ் ஆணையர் தலைமையில் 4 கூடுதல் ஆணையர்கள், 7 இணை ஆணையர்கள் மற்றும் பொலிஸ் துணைத் தலைவர்கள், 26 துணை ஆணையர்கள் மற்றும் காவல் கண்காணிப்பாளர்கள், சட்டம் - ஒழுங்கு, குற்றப் பிரிவு, போக்குவரத்து மற்றும் சிறப்பு பிரிவு ஆய்வாளர்கள், ஆயுதப்படை, அதிரடிப்படை, தமிழ்நாடு சிறப்பு காவல் படை காவல் ஆய்வாளர்கள் உள்பட 22,000 பொலிஸ் அதிகாரிகள் மற்றும் ஆய்வாளர்களுடன் 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிகழ்ச்சிகள் நடைபெறும் ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கம், அண்ணா பல்கலைக் கழகம், தங்குமிடமான கிண்டி ஆளுநர் மாளிகை, சென்னை விமான நிலையம், அடையாறு கடற்படைத் தளம் ஆகிய இடங்களிலும், அதன் சுற்றுப் புறங்களிலும், சென்னையில் செல்லும் வழித் தடங்களிலும், பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தீவிர சோதனைகள் மற்றும் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னையில் உள்ள தங்ககங்கள், தங்கும் விடுதிகள், நட்சத்திர ஓட்டல்கள் மற்றும் விடுதிகளிலும் சோதனைகள் மேற்கொண்டு சந்தேக நபர்கள் மற்றும் அந்நிய நபர்கள் உள்ளனரா என கண்காணிக்கப்பட்டு வருகிறது. இது தவிர்த்து முக்கிய ரயில் நிலையங்கள், பேருந்து முனையங்களிலும் பொலிஸார் மூலம் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இதேசமயம், இன்றும் நாளையும் சென்னை பொலிஸ் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ட்ரோன்கள் மற்றும் ஆளில்லா வான்வழி வாகனங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பதாகைகளில் பிரதமர் மோடியின் படங்களை ஒட்டிய பா. ஜ. கவினர்!




சென்னை, ஜூலை 28

44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டிகளுக்காக தமிழக அரசு சார்பில் சென்னையில் ஒட்டப்பட்டுள்ள சில விளம்பர பதாகைகளில் பிரதமர் நரேந்திர மோடியின் படங்களை பா. ஜ. கவினர் ஒட்டினர்.

44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டிகள் மாமல்லபுரத்தில் இன்று தொடங்குகிறது. இந்தப் போட்டிகள் வரும் ஓகஸ்ட் 10ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிக்காக தமிழக அரசு பல்வேறு வகையான விளம்பரங்களை செய்து வருகிறது. இந்த விளம்பரங்களில் பிரதமர் நரேந்திர மோடியின் படங்கள் இடம்பெறவில்லை என்று பா. ஜ. கவினர் தொடர்ந்து குற்றம்சாட்டி வந்தனர்.

போட்டியை இன்று பிரதமர் மோடி தொடக்கி வைக்கும் நிலையில், தமிழக பா. ஜ. கவினர் சென்னையில் சில இடங்களில் தமிழக அரசு வைத்துள்ள செஸ் ஒலிம்பியாட் விளம்பர பதாகைகளில், அந்த பதாகைகளின் அளவுக் கேற்ப பிரதமர் நரேந்திர மோடியின் படங்களை ஒட்டினர். குறிப்பாக, பேருந்து நிறுத்தங்களில் வைக்கப்பட்டுள்ள பதாகைகளில் பிரதமரின் படங்கள் ஒட்டப்பட்டுள்ளன. (ஐ)

# தி. மு. க. எம். பிக்கள் நிறுத்தம் ஏனையவர்கள் கவனவீர்ப்பு!

புதுடில்லி, ஜூலை 28

தி. மு. க. பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 19 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து 'ஜனநாயகப் படுகொலை' என அச்சிடப்பட்ட முகக்கவசம் அணிந்து பிற எம்.பி.க்கள் பாராளுமன்றம் சென்றனர்.

மாநிலங்களவையில் தொடர் அமளியில் ஈடுபட்டமைக்காக தி. மு. கவின் 6 எம்.பி.க்கள் உள்பட 19 பேரும், மக்களவையில் 4 காங்கிரஸ் எம்.பி.க்களும் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், எம்.பி.க்கள் இடைநீக்கத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பிற தி. மு. க. பாராளுமன்ற உறுப்பினர்கள் 'ஜனநாயகப் படுகொலை' என அச்சிடப்பட்ட கறுப்பு நிற முகக்கவசம் அணிந்து நேற்றைய பாராளுமன்ற கூட்டத்திற்கு வருகை தந்திருந்தனர். (ஐ)

# இலங்கைக்கு கடத்தவிருந்த வலி நிவாரணி மாத்திரை மீட்பு

தூத்துக்குடி, ஜூலை 28

தூத்துக்குடி கடற்கரையில் இருந்து இலங்கைக்கு படகில் கடத்த முயன்ற வலி நிவாரணி மாத்திரைகளை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

இந்த வலிநிவாரணி மாத்திரைகள் போதைப் பொருளாக மாற்றிப் பயன்படுத்தும் நோக்கில் கடத்தப்பட்டன என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

தூத்துக்குடி திரேஸ்புரம் கடற்கரையில் இருந்து இலங்கைக்கு ஒரு படகில் பொருள்கள் கடத்தப்படுகின்றன என்று குற்றவியல் பிரிவு பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து, அவர்கள் படகு ஒன்றை சோதனையிட்டனர். அதில், 443 பெட்டிகளில் 4430 வலி நிவாரணி மாத்திரைகள் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டன.

பொலிஸாரை கண்டதும் படகில் இருந்தவர்கள் தப்பிசென்றுவிட்டனர். மாத்திரைகளையும், படகையும் கைப்பற்றிய பொலிஸார் சுங்கத் துறையினரிடம் அதனை ஒப்படைத்தனர். (ஐ)

# போராட்டக்காரர்கள் மீது தாக்குதல்கள் வேண்டாம்

## சரத் பொன்சேகா கோரிக்கை



**கொழும்பு, ஜூலை 28**
**போராட்டக்காரர்கள் மீது தாக்குதல்களை நடத்தவேண்டாம் என்று பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா கோரிக்கை விடுத்துள்ளார்.**

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற அவசரகால சட்டத்தை நீடிப்பு தொடர் பான விவாவத்தில் உரையாற்றிய போதே சரத் பொன்சேகா இந்த கோரிக்கையை விடுத் தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

போராட்டக்காரர்கள் நாட்டுக்காக போராடினார்கள். அவர்கள் எங்களின் உறவி னர்கள்.

எனவே அவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டாம். அதேநேரம் ஊழல் அரசியல்வாதிகளை பாதுகாக்க வேண்டாம். இவ்வாறான தாக்குதல்கள் மூலம் இலங்கை இராணுவத் துக்கு கிடைத்த பெருமையை பழுதாக்கவேண் டாம்-என்றார். (அ)



# வெலிக்கடை சிறைப் படுகொலையின் 39 ஆவது ஆண்டு நினைவு மன்னாரில்

மன்னார், ஜூலை 28
வெலிக்கடைச் சிறைப் படு கொலையின் 39 ஆவது ஆண்டு நினைவு தினமான “தமிழ் தேசிய வீரர்கள் தினம்” மன் னார் மாவட்ட தமிழீழ விடு தலை இயக்கத்தின் அலுவலகத் தில் நேற்று புதன்கிழமை முற் பகல் 11 மணியளவில் நினைவு கூரப்பட்டது.

தமிழீழ விடுதலை இயக் கத்தின் மாவட்ட அமைப்பா ளர் லுஸ்ரின் மோகன் ராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் வெலிக்கடைச் சிறையில் படு கொலை செய்யப்பட்ட தலை வர் தங்கத்துரை, தளபதி குட்டி மணி, முன்னணிப் போராளி களான ஜெகன், தேவன் உட்பட 53 அரசியல் கைதிகளுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

உருவப்படத்துக்கு மாலை அணிவித்து சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட் டது. இதன்போது கட்சியின் முக்கியஸ்தர், பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.வினோ நோகராதலிங்கம் ,கட்சியின் உறுப்பினர்கள், ஈ.பி.ஆர்.கட் சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ் உள்ளிட் டோர் கலந்து கொண்டு சுடர் ஏற்றி,மலர் தூவி அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக் கது. (அ)

# அவசரகால சட்டத்துக்கு விமல் வீரவன்ஸ ஆதரவு

கொழும்பு, ஜூலை 28
“தற்போதைய அரசு சட்ட பூர்வமானது. அது அரசமைப் புக்கு உட்பட்டது. எனவே, அவ சரகால சட்டத்துக்கு இம்முறை ஆதரவாக வாக்களிப் போம்.” - என்று தேசிய சுதந்திர முன்ன ணியின் தலைவர் விமல் வீரவன்ஸ எம்.பி. தெரிவித்தார்.

அவசரகால சட்டம் தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத் தில் கலந்துகொண்டு உரையாற் றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“மக்களின் அறவழி போராட் டத்தை மதிக்கின்றோம். ஆனால் தற்போது நாட்டை வீழ்த்துவ தற்கு திட்டமிடப்படுகின்றது. எமக்கு இந்த நாடு அவசியம். ரணில் ஆட்சியில் அமைச்சுப் பதவி வேண்டாம். எதிரணியில் இருந்தால்கூட எமக்கு நாடு முக் கியம். அதற்காக தொடர்ந்து குரல் கொடுப்போம்.

அதேவேளை, அவசரகாலச் சட்டம் சாதாரண மக்களுக்கு எதிராக பயன்படுத்தக்கூடாது. அவ்வாறு பயன்படுத்தினால் அடுத்த மாதம் எதிராக வாக் களிப் போம்.” - என்றும் விமல் குறிப்பிட்டார். (அ)

# பஸில் ராஜபக்ஷ ஒதுங்கவில்லை!

கொழும்பு, ஜூலை. 28
ஸ்ரீலங்கா பொதுஜன பெர முனவை பலப்படுத்துவதற் கான நடவடிக்கையில் தேசிய அமைப்பாளராக பஸில் ராஜ பக்ஷ தீவிரமாக செயற்பட்டு வருகின்றார் - என்று பாரா ளுமன்ற உறுப்பினர் இந்திக்க அநுருத்த தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஊடக சந்திப்பு நேற்று முற்பகல் அந் தக் கட்சியின் தலைமையகத் தில் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

“பஸில் ராஜபக்ஷ செயற் பாட்டு அரசியலுக்கு வருவாரா என்பது தெரியாது. ஆனால் தேசிய அமைப்பாளராக அவர் கட்சியை வழிநடத்துவார். தற் போது கட்சி மறுசீரமைப்பு பணி இடம்பெற்றுவரு கின்றது.” - எனவும் அவர் கூறினார். (அ)

# கொழும்பில் போராட்டம் நடத்திய மற்றுமொரு இளைஞர் கடத்தல்!

கொழும்பு, ஜூலை 28
கொழும்பில் இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்ட இளைஞரொருவர் பலவந்தமாக சிலரால் அழைத் துச் செல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ருகுணு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவரும், அர சியல் செயற்பாட்டாளருமான அந்தோனி வெரங்க புஷ்பிகா, கொழும்பில் ஜி.சி 0342 என்ற இலக்கமுடைய ஜீப்பில் கடத் தப்பட்டுள்ளார் எனத் தகவல் கள் வெளியாகியுள்ளன. (அ)

# திரிபோஷா உற்பத்தி மீண்டும் ஆரம்பமானது

கொழும்பு, ஜூலை 28
பல மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த திரி போஷா உற்பத்தி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திரிபோஷா உற்பத்திக்கு தேவையான சோளம் உள் ளிட்ட மூலப்பொருட்களுக் கான தட்டுப்பாடு காரணமாக திரிபோஷா உற்பத்தி கடந்த சில மாதங்களாக இடைநிறுத் தப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து நாட் டில் திரிபோஷா உற்பத்தியை மீளவும் ஆரம்பிப்பதற்கான நிதியுதவியை வழங்க உலக உணவுத் திட்டம் அண்மையில் இணக்கம் தெரிவித்திருந்தது.

உலக உணவுத் திட்ட அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவுடன் நடை பெற்ற கலந்துரையாடலின் போதே இவ்வாறு இணக்கப் பாடு எட்டப்பட்டிருந்தது.

இந்தநிலையிலேயே தற்போது திரிபோஷா உற்பத்தி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள் ளது. (அ)

# ஹர்ஷவுக்கு அமைச்சு பதவி?

கொழும்பு, ஜூலை 28
சர்வகட்சி அரசின் நிதி அமைச்சு பதவிக்கு, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா வின் பெயர் முன்மொழியப்பட் டுள்ளதாக தெரியவருகின்றது.

எனினும், அரசில் இணைந்து அமைச்சுப் பதவியை பெற்றுக் கொள்வாரா என்பது தொடர் பில் ஹர்ஷ டி சில்வா இது வரை எவ்வித அறிவிப்புகளை யும் விடுக்கவில்லை.

சர்வகட்சி அரசு அமைக்கப் படும் என ஜனாதிபதி கூறினா லும், அதில் இணைந்து பத விகளை பெறப்போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தி அறி வித்துள்ளது. (அ)

# பொருளாதார நெருக்கடி வழக்கில் இருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுதலை

கொழும்பு, ஜூலை 28
பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட அடிப் படை உரிமை மீறல் வழக்கிலி ருந்து ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க விடுவிக்கப் பட்டுள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர் கள் தொடர்பாக விசாரணை நடத்த அரசாங்கத்துக்கு உத்தர விடுமாறு கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவின் பிரதிவாதி யாக குறிப்பிடப்பட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங் கவை விடுவிப்பதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# காலி முகத்திடல் போராட்டத் தளத்தை வேறு இடத்துக்கு மாற்றுவது அவசியம்

## நகர அபிவிருத்தி அமைச்சர் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 28
கொழும்பு காலி முகத்திட லில் உள்ள போராட்டத் தளத்தை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க முன்மொழிந்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர், போராட் டத் தளத்தை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துக்கு அருகாமையில் உள்ள விகார மஹாதேவி பூங்காவுக்கு மாற்ற முடியும்.

நகர அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி செயலகத்துக்கு எதிரே உள்ள போராட்டம் பொருத்தமான இடம் அல்ல.

காலி முகத்திடலானது வெளிநாட்டு சுற்றுலாப் பய ணிகளையும் உள்ளூர் மக்களை யும் கவரும் இடமாக உள்ளது. எனவே காலி முகத்திடல் போராட்டத் தளத்தை உடனடி யாக அகற்ற வேண்டியது அவசியமாகும்-என்றார். (அ)

# பிள்ளைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பது முக்கியமானது

## கொரோனா பரவல் தீவிரம்

கொழும்பு, ஜூலை 28
நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்து வரும் நிலையில் பிள்ளைக ளைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுமாறு குடும்ப சுகா தார அலுவலகம் பெற்றோர்க ளிடம் விசேட கோரிக்கையை விடுத்துள்ளது.

நாட்டில் உள்ள சகல பாட சாலைகளும், மேலதிக வகுப் புகளுக்கும் விடுமுறை வழங்கப் பட்டுள்ளமையால் அத்தியாவ சியமற்ற பயணங்களை மேற் கொள்ளவதற்கு இடமளிக்கா மல்ல வீட்டிலேயே பிள்ளைக ளைப் பாதுகாப்பாக வைத்தி ருக்குமாறு விசேட வைத்தியர் சித்ரமாலி டி சில்வா பெற்றோர் களிடம் கேட்டுள்ளார்.

பிள்ளைகளுக்குக் காய்ச்சல், இருமல், தடுமல், சுவாசிப்பதில் சிரமம் போன்ற அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக அருகில் உள்ள அரச வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லுமாறு அறிவுறுத்தப்பட் டுள்ளது. (அ)

# போராட்டக்களம் போதைப்பொருள் அடிமைகளின் கூடாரமாகியுள்ளது!

## பிரசன்ன ரணதுங்க குற்றச்சாட்டு



**கொழும்பு, ஜூலை 28**

**காலி முகத்திடல் போராட்டக்களம் தற்போது போதைப்பொருள் அடிமைகளின் கூடாரமாக மாறியுள்ளதாக ஆளுங்கட்சியின் பிரதான அமைப்பாளர், அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று அவசரகால நிலையை நீடிப்பது தொடர்பான விவாதம் இடம்பெறுகிறது. அதன் போது உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், “கோட்டா கோ ஹோம்” அதாவது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகிச்செல்லுமாறு கோரியே காலி முகத்திடலில் ஆரம்பத்தில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

எனினும், தமது நோக்கம் நிறைவேறிய பின்னரும் போராட்டம் தொடர்கிறது. இது நியாயமற்றது. நாட்டை சீர்குலைத்து, ஆட்சி கவிழ்ப்புக்கு வழிவகுக்கும் இடமாக அது இருக்கக்கூடாது.

அமைதி போராட்டக்காரர்களுக்கு பின்னால் ஒழிந்துகொண்டு இந்த போராட்டத்தை பாதாள உலக குழுவினரும், போதைப்பொருள் கடத்தல்காரர்களுமே முன்னெடுக்கின்றனர். இதற்கு சில அரசியல்வாதிகள் ஆதரவு வழங்கினர்.

அதனூடாக அவர்கள் தமது அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொண்டனர்.

போராட்டக்காரர்கள் என்று கூறுபவர்கள், ஜனாதிபதி மாளிகையின் வேலிகளை திருடினர். ஜனாதிபதி செயலகத்தின் சொத்துக்களை சேதப்படுத்தினர். இவர்களா இந்த நாட்டை கட்டியெழுப்பப் போகிறார்கள்?.

தற்போது, கோட்டாபயவின் பெயரை நீக்கி வேறு சிலரை துரத்துவதற்கு போராட்டம் நடக்கிறது.

துறைமுகம், உயர்தர சுற்றுலா விடுதிகள், துறைமுக நகர் போன்ற பொருளாதார கேந்திரங்கள் அமைந்துள்ள இடத்தை அண்டி போராட்டம் நடத்தப்படுவதால் நாளைய முதலீடுகளை அது பாதிக்கக்கூடும்.

வாக்குகளால் அதிகாரத்துக்கு வரமுடியாது என அறிந்துள்ள சில அரசியல்வாதிகள் கலகத்தினால் ஆட்சிக்குவர முயற்சிக்கின்றனர்.

இத்தகைய போராட்டங்களை பார்க்கும் வெளிநாட்டினர் முதலீட்டுக்கு தகுதியற்ற நாடாக எம்மை கணிக்கக்கூடும். தற்போது, உண்மை பேராட்டக்காரர்கள் விலகியுள்ளனர். போதைப்பொருள் வர்த்தகர்களும், பாதாள உலகக்குழுவினருமே தற்போது போராட்டத்தை வழிநடத்துகின்றனர்.

கடந்த வார சம்பவத்தின் பின்னர் சிலர் இராணுவத்தின் செயற்பாடுகளை விமர்சிக்கின்றனர்.

அவர்கள் மக்களையும் எம்மையும் பாதுகாப்பதற்காகவே போராடுகின்றனர். விடுதலைப் புலிகளுடன் போராடி இராணுவத்தினர் தோற்கடித்தனர்.

எனினும், அமைதி போராட்டங்களுக்கு அவர்கள் மதிப்பளித்தனர். இறுதியில் மிகவும் கேவலமாக அவர்களை போராட்டக்காரர்கள் நடத்தினர்.

அவசரகால நிலையை நீடிக்க அனைவரும் ஆதரவளிக்க வேண்டாம். அவ்வாறு செய்யாதவர் பயங்கரவாதத்துக்கு ஆதரவு வழங்குவோராக கருதப்படுவர்-என்றார். (அ)

---

### யாழ்.பல்கலைக்கழக பகிடிவதை விவகாரம்

# குற்றம் நிரூபிக்கப்படும் மாணவர்களுக்கு இரு வருடத்துக்கு குறையாத வகுப்பு தடை!

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்.பல்கலைக்கழகத்தில் பகிடிவதையில் ஈடுபட்டுள்ளனர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள மாணவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் , பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2 வருட காலத்துக்குக் குறையாத வகுப்புத் தடை விதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.பல்கலைக்கழத்தின் கலைப்பீட புதுமுக மாணவர்கள் ஒன்றுகூடல் எனும் பெயரில் தெல்லிப்பளைப் பகுதிக்கு அழைத்துப் பகிடிவதைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்று மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த. கனக ராஜூக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

முறைப்பாட்டின் பிரகாரம் அது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழு இணைப்பாளரால் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு அறிவிக்கப்பட்டது.

அதையடுத்து சட்ட நிறைவேற்று அதிகாரி, மாணவர் ஆலோசகர் மற்றும் மாணவர் ஒழுக்காற்று அதிகாரி உள்ளிட்ட குழுவினர் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று கலைப்பீட புதுமுக மாணவர்களை சிரேஷ்ட மாணவர்களிடம் இருந்து மீட்டனர்.

குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்க ஏதுவாக சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனும் சந்தேகத்தில் கலைப்பீட இரண்டாம் வருட மாணவர்கள் 18 பேருக்குத் தற்காலிக வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகத்தினர் தமது பூர்வாங்க விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். புதுமுக மாணவர்களின் வாக்குமூலங்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகளிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

பூர்வாங்க விசாரணைகளின் அடிப்படையில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்படும் மாணவர்களுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும். அதன் அடிப்படையில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்படும் மாணவர்களுக்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2 வருட காலத்துக்குக் குறையாத வகுப்புத் தடை விதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

---



# வன்னிப் பிராந்திய மக்களின் பிரச்னைகள் குறித்து ஆராய்வு

வவுனியா, ஜூலை 28

வன்னிப் பிராந்தியத்தில் உள்ள மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கிய சிவில் சமூக அமைப்பு பிரதிநிதிகளை உள்ளடக்கி மாவட்ட ரீதியாக காணப்படும் பிரச்னைகள் தொடர்பாக ஆராயும் விசேட ஒன்றுகூடல் மன்னார் மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் மாலை வவுனியா அமைதியம் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இந்த ஒன்றுகூடலில் மன்னார், வவுனியா,முல்லைத்தீவு மாவட்டங்களில் தொடர்ச்சியாக இடம் பெறும் காணி அபகரிப்பு,காற்றாலை மின் செயற்திட்டம் ,சட்டவிரோத மணல் அகழ்வு, பௌத்த மயமாக்கல் செயற்பாடுகள் போன்ற பல்வேறு பிரச்னைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

அதே நேரம் குறித்த ஒன்றுகூடலில் பிரச்னைகளுக்கான தீர்வை பெற்றுக் கொள்வதற்கான ஆவணங்கள் தயார்படுத்தல் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான தெளிவுபடுத்தலும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சிவில் சமூக அமைப்பு பிரதிநிதிகள், மெசிடோ நிறுவன அதிகாரிகள், ஊடகவியளாலர்கள் , ட்ரான்ஸ்பரன்ஸி இன்ரநஷனல் வடமாகாண இணைப்பாளர் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

---

# ஜனாதிபதி ரணிலை சந்தித்த அமெ. தூதுவர்

கொழும்பு, ஜூலை. 28

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடியதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் தெரிவித்துள்ளார்.

ருவிட்டர் பதிவொன்றை வெளியிட்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி எவ்வாறு ஏற்பட்டது என்பது தொடர்பிலும், அனைவருக்கும் பிரகாசமான எதிர்காலத்தை நோக்கிச் செல்ல நாம் எவ்வாறு ஒன்றிணைந்து செயல்படுவது என்பது குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டதாக அமெரிக்கத் தூதுவர் குறிப்பிட்டார். (அ)



---

# தேயிலை தொழிற்சாலையில் தீ!

கொழும்பு, ஜூலை 28

புஸ்ஸல்லாவை - வஹூகபிட்டிய பிரதேசத்தில் உள்ள தேயிலை தொழிற்சாலை ஒன்றில் தீ பரவியுள்ளது.

பொலிஸாரும் பிரதேசவாசிகளும் இணைந்து தீப்பரவலை கட்டுப்படுத்தியபோதிலும், தேயிலைத் தொழிற்சாலைக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை. எனினும், தேயிலை தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டிருந்த தேயிலையும் தீக்கிரையாகியுள்ளதாக பொலிஸார் கூறினர். (அ)

# ஜனநாயகப் போராட்டங்களுக்கு செவிசாய்க்க அரசாங்கம் தயார்!

## பாராளுமன்றில் பிரதமர் அறிவிப்பு

கொழும்பு,ஜூலை.28

**ஜனநாயக போராட்டங்களுக்கு செவிசாய்க்க அரசாங்கம் எப்போதும் தயாராக உள்ளது என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று விசேட அறிக்கையொன்றை ஆற்றியபோதே பிரதமர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனநாயக அரசு என்ற முறையில், பொதுமக்களின் போராட்டங்களுக்கு செவிசாய்க்க நாங்கள் தயாராக



இருக்கிறோம்.

அஹிம்சை வழியில் செயல்படும் மக்களின் அகிம்சைக் குரலுக்காக அரசு என்ற முறையில் இணைந்து செயல்படுகிறோம்.

ஆனால் தீவிரவாதத்தை ஏற்க முடியாது. ஜனநாயகத்திற்கு எதிரான பெரும் அச்சுறுத்தலை பயங்கரவாதமாக மாற்றுவதற்கு ஆதரவளிக்கமாட்டோம்-என்றார். (அ)

# தேசிய எரிபொருள் அனுமதிச் சீட்டுக்காக 4 மில்லியனுக்கும் அதிக வாகனங்கள் பதிவு

கொழும்பு, ஜூலை. 28

கடந்த செவ்வாய் இரவு 9 மணி நிலவரப்படி 04 மில்லியனுக்கும் அதிகமான பயனர்கள் தேசிய எரிபொருள் அனுமதிச் சீட்டுக்காக பதிவு செய்துள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

ருவிட்டர் பதிவொன்றில் அமைச்சர் குறித்த கருத்தினை வெளியிட்டுள்ளார், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 299 எரிபொருள் நிரப்பு நிலையங்களும், லங்கா இந்தியன் ஒயில் நிறுவனத்தின் 34 எரிபொருள் நிலையங்களும் நேற்று முன் தினம் கியூ.ஆர். முறையை முழுமையாக ஏற்று சோதனை செய்ததாக அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மொத்தமாக 92,845 பரிவர்த்தனைகளை நிறைவு செய்துள்ளதாக அமைச்சர் மேலும் கூறினார்.

இலங்கையில் மொத்தம் 7.5 மில்லியன் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன, எனினும் நேற்று முன்தினம் நிலவரப்படி 4 மில்லியனுக்கும் அதிகமான வாகனங்கள் மட்டுமே தேசிய எரிபொருள் அனுமதிச் சீட்டுக்காக பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# எரிபொருளை அதிக விலைக்கு விற்போரை கைது செய்யும் பொலிஸாருக்கு பணப்பரிசு!

கொழும்பு, ஜூலை. 28

சட்டவிரோதமான முறையில் எரிபொருளினை சேகரித்து அதிக விலைக்கு விற்பனை செய்பவர்களை கைது செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு 50 ஆயிரம் முதல் 3 இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான பணப்பரிசு வழங்கப்படவுள்ளது.

பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இதற்கமைய 100 லீற்றர் வரையான பெற்றோல் அல்லது டீசலை கைப்பற்றும் அதிகாரிகளுக்கு 50 ஆயிரம் ரூபாவும், 100 முதல் 500 லீற்றர் வரையிலான எரிபொருளை கைப்பற்றும் அதிகாரிகளுக்கு 02 இலட்சம் ரூபாவும் பரிசாக வழங்கப்படவுள்ளது.

அத்துடன், 500 முதல் 1000 லீற்றர் வரையான எரிபொருளைக் கைப்பற்றுவோருக்கு 03 இலட்சம் ரூபாயும் வழங்கப்படவுள்ளது.

அதிகரித்து வரும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நாடளாவிய ரீதியில் அதிகரித்து வரும் எரிபொருளின் தேவையைப் பயன்படுத்தி சிலர் சட்டவிரோத எரி பொருள் சேகரிப்பு மற்றும் அதிக விலைக்கு விற்பனை செய்வதால் நுகர்வோர் கடும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்தநிலையில் இதனை தடுக்கும் வகையிலேயே குறித்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன தெரிவித்துள்ளார். (அ)

# சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முற்பட்ட 07 பேர் கைது!

கொழும்பு, ஜூலை. 28

சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக வெளிநாடுகளுக்கு செல்ல முற்பட்ட 07 பேரையும், கடத்தலில் ஈடுபட்ட இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வென்னப்புவ - நைனாமடம் பகுதியில் வைத்து நேற்று அதிகாலை இவர்கள் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவர்களில் மூன்று சிறு சிறுவர்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, ஜா-எல மற்றும் மினுவாங்கொடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். (அ)

# கரும் குளவிக் கொட்டுக்கு இலக்கான பெண் மரணம்!

யாழ்ப்பாணம், ஜூலை. 28

விறகு எடுக்க சென்றபோது கரும் குளவிக் கொட்டுக்கு இலக்கான குடும்பப் பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் இராசசிங்கம் வீதி, வல்வெட்டி, வல்வெட்டித்துறையை சேர்ந்த ஈஸ்வரி பாஸ்கரன் (வயது- 60) என்பவராவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை விறகு எடுப்பதற்காக மேற்படி குடும்பப் பெண் அயலில் உள்ள பகுதிக்கு சென்றபோது வீழ்ந்து இருந்த பனை ஓலையில் இருந்த கருங்குழவிகள் மூன்று அவரின் தலையில் கொட்டியவாறு விடுபடாமல் இருந்துள்ளன. சுதாகரித்துக் கொண்டு அவர் வீட்டுக்கு ஓடி வந்தபோது அவரின் மகள் குழவிகளை அகற்றி உடனடியாக ஊரணி வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டபோதும் அங்கு மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். (அ)

# பாராளுமன்ற உறுப்பினராக நேற்று பதவியேற்றார் வஜிர!

கொழும்பு, ஜூலை. 28

தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக வஜிர அபேவர்தன நேற்று சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்ரமசிங்க, தமது பாராளுமன்ற உறுப்புரிமையிலிருந்து கடந்த 21 ஆம் திகதி முதல் விலகியுள்ளார்.

அவரது பதவி விலகல் கடிதத்தை பாராளுமன்றச் செயலாளர் நாயகம் நேற்று சபைப்படுத்தினார்.

கடந்த 20 ஆம் திகதி பாராளுமன்றில் இடம்பெற்ற தேர்தலில் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக தெரிவானார்.

அதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு, வஜிர அபேவர்தனவின் பெயர் பரிந்துரைக்கப்



பட்டது.

அவரது பெயர் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியின் ஊடாக பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், நேற்றைய சபை அமர்பில், அவர் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியபிரமாணம் செய்துக்கொண்டார். (அ)

# சபை முதல்வரானார் சுசில்

கொழும்பு, ஜூலை. 28

புதிய சபை முதல்வராக அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் சபாநாயகர் இதனை அறிவித்தார்.

முன்னதாக சபை முதல்வராக செயற்பட்ட அமைச்சர் தினேஸ் குணவர்தன பிரதமராக பதவியேற்றுள்ளார்.

அதனால் சபை முதல்வர் பதவி வெற்றிடமானதை யடுத்து, அதற்காக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த நியமிக்கப்பட்டார். (அ)

# 28 அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் நியமனம்

கொழும்பு, ஜூலை. 28

28 அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் நியமனம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, நிதி அமைச்சின் செயலாளராக கே.எம்.எம்.சிறிவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் செயலாளராக அருணி விஜேவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக கலாநிதி அமல் ஹர்ஷ டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் 28 அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (அ)

# மேலும் 14 நாட்கள் சிங்கப்பூரில் தங்க கோட்டாபயவுக்கு அனுமதி

கொழும்பு, ஜூலை. 28

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மேலும் 14 நாட்கள் தங்கியிருக்க சிங்கப்பூர் அனுமதி வழங்கியுள்ளதாக ஸ்ட்ரெய்ட்ஸ் ரைம்ஸ் நாளிதழ் நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்பு கோட்டாபய ராஜபக்ஷ தனிப்பட்ட விஜயமாக சிங்கப்பூர் சென்றபோது வழங்கப்பட்ட குறுகிய கால பயண அனுமதி 14 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது என்று அந்த பத்திரிகை தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதிக்கு தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், அவர் புகலிடம் கோரவில்லை அல்லது வழங்கப்படவில்லை எனவும் சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சு ஏற்கனவே அறிவித்திருந்த நிலையில்,

தி ஸ்ட்ரெய்ட்ஸ் ரைம்ஸின் முந்தைய அறிக்கையில், சிங்கப்பூரின் குடிவரவு திணைக்களம், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 14 நாள் குறுகிய கால பயண அனுமதி வழங்கப்பட்டதை உறுதிப்படுத்தியது.

மேலும் இலங்கையில் இருந்து வரும் சுற்றுலா பயணிகளுக்கு பொதுவாக சிங்கப்பூரில் 30 நாள் குறுகிய காலப் பயண அனுமதி வழங்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# சிங்கப்பூரில் கோட்டாபயவை கைது செய்ய வலுக்கும் கோரிக்கை

## நாட்டை விட்டு வெளியேறுகிறாரா?

சதீஷ் பார்த்திபன்

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கைது செய்ய வேண்டும் என்று சிங்கப்பூரில் கோரிக்கை வலுத்து வருகிறது. இது தொடர்பாக சிங்கப்பூர் அரசு தலைமை சட்ட அதிகாரியிடம் (அட்டர்னி ஜெனரல்) குற்றவியல் புகார் அளிக்கப்பட்டுள்ளது. தென்னாப்பிரிக்காவை மையமாகக் கொண்டு இயங்கும் அனைத்துலக உண்மை மற்றும் நீதித் திட்டங்களுக்கான அமைப்பு இந்தப் புகாரை அளித்துள்ளது.

அனைத்துலக சட்ட வரம்புக்கு உட்பட்டு கோட்டாபய மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் சிங்கப்பூர் அரசாங்கமும்கூட தனது நாட்டுச் சட்டங்களின் கீழ் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள இயலும் என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு இலங்கை பாதுகாப்பு அமைச்சு செயலாளராகப் பொறுப்பு வகித்தார் கோட்டாபய ராஜபக்ஷ, அப்போது இலங்கை ராணும் தமிழர்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டிவிட்டதாக அவர் மீது புகார்களும் குற்றச்சாட்டுகளும் எழுந்தன. ஆயிரக்கணக்கான தமிழர்கள் முள்ளிவாய்க்கால் இறுதிப்போரில் பலியானதாக் கூறப்பட்ட நிலையில், அவர் இலங்கை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.





கோட்டாபய கடந்த 14 ஆம் திகதியே சிங்கப்பூர் சென்றடைந்தார். எனவே அவர் வெளியேற வேண்டிய நேரம் நெருங்கிவிட்டதாகக் கூறப்படுகிறது. இலங்கையின் முன்னாள் அதிபர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, குறுகிய கால விசா வழங்கப்பட்டுள்ளதாக சிங்கப்பூர் குடிநுழைவு சோதனைச் சாவடிகள் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், போர் குற்றங்கள் உட்பட கோட்டாபயவுக்கு எதிராக அளிக்கப்பட்டுள்ள பல்வேறு புகார்கள் குறித்து சிங்கப்பூரிலேயே அவர் மீது சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள முடியும் என்கிறது அனைத்துலக உண்மை மற்றும் நீதித் திட்டங்களுக்கான அமைப்பு. அதற்கான காரணங்களையும் அது பட்டியலிட்டுள்ளது.

இலங்கையில் நிகழ்ந்த இறுதிகட்ட போரின்போது கோட்டாபய பல்வேறு போர்க்குற்றங்களைப் புரிந்ததாக அந்த அமைப்பு சாடியுள்ளது.

இது தொடர்பாக பல்வேறு தகவல்களைத் திரட்டி இருப்பதாகவும் உறுதி செய்யப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே முன்னாள் இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றும் அந்த அமைப்பின் வழக்கறிஞர் அலெக்சாண்டிரா லில்லி கேதர் தெரிவித்திருக்கிறார்.

அலெக்சாண்டிரா, தற்போது ஜெர்மனியின் பெர்லின் நகரில் உள்ளார் என்றும், ராய்ட்டர்ஸ் செய்தி முகமை அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது மேற்கண்டவாறு தெரிவித்தததாகவும் கூறப்பட்டுள்ளது.

“கோட்டாபயவுக்கு எதிராக புகார் செய்துள்ளோம். சிங்கப்பூர் அரசாங்கம் அவரை கைது செய்வதன் மூலம் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு உண்மை நிலையைப் பறைசாற்ற முடியும். அதற்கான அரிய வாய்ப்பு இப்போது சிங்கப்பூருக்கு அமைந்துள்ளது,” என்கிறார் அலெக்சாண்டிரா லில்லி கேதர்.

சிங்கப்பூர் தனது சொந்த சட்டங்களையும் கொள்கைகளையும் கொண்டுள்ளது. அவற்றின் அடிப்படையிலேய கோத்தபாய ராஜபக்ஷ மீது நடவடிக்கை எடுக்க முடியும் என்று அவர் சுட்டிக்காட்டி உள்ளார். சிங்கப்பூர் தலைமைச் சட்ட அதிகாரியிடம் அளிக்கப்பட்டுள்ள புகார் கடிதத்தை தயாரித்த குழுவில் அலெக்சாண்டிராவும் ஓர் உறுப்பினர்.

இற்கிடையே, சிங்கப்பூரில் உள்ள கோட்டாபயவை தொடர்புகொள்ள ராய்ட்டர்ஸ் முயற்சி மேற்கொண்ட போதிலும், பலன் கிடைக்கவில்லை எனவும் கூறப்படுகிறது.

இறுதிக்கட்ட போரின்போது



அலெக்சாண்டிரா லில்லி கேதர்

கோட்டாபய ராஜபக்சே ஜெனிவா ஒப்பந்தங்களை மீறிவிட்டதாகவும், அனைத்துலக உண்மை மற்றும் நீதித் திட்டங்களுக்கான அமைப்பு அளித்துள்ள 63 பக்கங்களுக்கு நீளும் குற்றவியல் புகார் மனுவில் குறிப்பட்டுள்ளதாக ராய்ட்டர்ஸ் முகமை கூறியுள்ளது.

கோட்டாபயவைக் கைது செய்வது தொடர்பாக அந்த அமைப்பிடம் இருந்து ஒரு கடிதம் கிடைக்கப் பெற்றுள்ளதாக சிங்கப்பூர் தலைமைச் சட்ட அதிகாரி அலுவலகத்தின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

கடந்த 23ஆம் திகதி இந்தக் கடிதம் பெற்றபட்டுள்ள நிலையில், இந்த விவகாரம் குறித்து மேலதிக கருத்துகள் எதையும் தெரிவிக்க இயலாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### வெளியுறவுத்துறை விளக்கம்

கோட்டாபய ராஜபக்ஷ தனிப்பட்ட காரணங்களுக்காக சிங்கப்பூர் வந்திருப்பதாகவும், அவர் புகலிடம் கோரவில்லை என்றும் சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

“போர்க்குற்றம், இனப்படுகொலை, சித்ரவதை தொடர்பான குற்றச்சாட்டுகளை சிங்கப்பூர் நீதிமன்றத்தால் விசாரிக்க இயலும் என்றாலும், சிங்கப்பூர் அந்த நடவடிக்கையை கடைசி வாய்ப்பாக மட்டுமே பயன்படுத்தும்,” என்று அரசு பலமுறை தெரிவித்துள்ளது என்றார் பிரிட்டனில் உள்ள போர்ட்ஸ்மவுத் பல்கலைக்கழக சட்டப் பள்ளியின் பேராசிரியர் பாங்கர் டாம். இவர் சிங்கப்பூரிலும் சில காலம் பணியில் இருந்துள்ளார்.

சிங்கப்பூர் தனது வெளியுறவுக் கொள்கையில் நடுநிலையைக் கடைப்பிடிப்பதாக அதிகாரபூர்வமா அறிவிக்கவில்லை என்றாலும் அந்நாடு நீண்டகாலமாக அவ்வாறு செயல்பட்டு வருவதாகவும் பாங்கர் தெரிவித்துள்ளார்.

எனவே, ஒரு வெளிநாட்டுத் தலைவரை மீது வழக்கு தொடுக்கப்பட வேண்டும் எனில், சிங்கப்பூரின் வெளிநாட்டுக் கொள்கைகளுக்கு ஏற்ப அதை சமநிலைப்படுத்த வேண்டிய அவசியம் எழும் என்றும் அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

இதற்கிடையே, கடந்த 2008ஆம் ஆண்டு போர்ப் பகுதியில் இருந்து ஐ.நா, நிவாரண முகமைகளை உடனடியாக வெளியேறுமாறு உத்தரவிட்டதாகவும், அனைத்துலக உண்மை மற்றும் நீதித் திட்டங்களுக்கான அமைப்பு கூறியுள்ளது.

“இதன் மூலம் தமிழர்களுக்கு எதிராக இலங்கை ராணுவம் கட்டவிழ்த்துவிடும் வன்முறைக்கும் படுகொலைகளுக்கும் சாட்சிகள் இல்லை என்பதை உறுதி செய்துகொண்டார் கோட்டாபய.

கோட்டாபயவை கைது செய்து விசாரணை செய்து, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டும் என்று தலைமை சட்ட அதிகாரியிடம் மனு அளித்துள்ளோம். இதுவே எங்கள் வழக்கின் அடிப்படையாக இருக்கும்,” என்கிறார் அந்த அமைப்பின் செயல் இயக்குநர் யாஸ்மின் சூக்கா.

### சிங்கப்பூரில் இருந்து கோட்டாபய வெளியேற வேண்டுமா?

இதற்கிடையே கோட்டாபய எங்கும் ஓடி ஒளியவில்லை என்றும் அவர் மீண்டும் இலங்கைக்கு வர உள்ளதாகவும் இலங்கை அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தணா தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காக SOCIAL PASS அடிப்படையில்தான் சிங்கப்பூருக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும், இவ்வாறான ஏற்பாட்டில் ஒருவர் சிங்கப்பூர் வந்தால், சம்பந்தப்பட்டவர் அங்கு 14 நாள்கள் மட்டுமே தங்கி இருக்க முடியும்.

கோட்டாபய கடந்த 14ஆம் திகதியே சிங்கப்பூர் சென்றடைந்தார். எனவே அவர் வெளியேற வேண்டிய நேரம் நெருங்கிவிட்டதாகக் கூறப்படுகிறது.

இலங்கையின் முன்னாள் அதிபர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, குறுகிய கால விசா வழங்கப்பட்டுள்ளதாக சிங்கப்பூர் குடிநுழைவு சோதனைச் சாவடிகள் ஆணையம் தெரிவித்துள்ளது.

பொதுவாக இலங்கையிலிருந்து சிங்கப்பூருக்கு பயணம் மேற்கொள்ளும் சுற்றுலா பயணிகளுக்கு 30 நாள்களுக்கான “சோஷியல் விசிட்“ எனும் சுற்றுப்பயண விசா வழங்கப்படும். அந்த விசா 30 நாள்களுக்குச் செல்லுபடியாகும்.

ஆனால் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 14 நாள் விசா வழங்கப்பட்டதாக “ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்” ஊடகம் தெரிவித்துள்ளது.

எனவே, அவர் மேலும் சில காலம் தங்க சிங்கப்பூரின் குடிநுழைவு சட்டங்கள் அனுமதிக்குமா என்பது குறித்து அரசுத்தரப்பில் இன்னும் தெளிவுபடுத்தப் படவில்லை. (பிபிசி)




சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சகம்

# நியாயப்பாடுடைய அரசாங்கத்தை நிறுவ ஜனாதிபதி கடுமையாக பாடுபடவேண்டியிருக்கும்

**கலாநிதி ஜெகான் பெரேரா**

**பா**ராளுமன்றத்தில் பெரிய வாக்குகள் வித்தியாசத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவுசெய்யப்பட்டதை அடுத்து கடந்த நான்கு மாதங்களாக நீடித்த ஆரசியல் மற்றும் பொருளாதார குழப்பநிலை முடிவுக்கு வரும் என்று பொதுமக்கள் மத்தியில் தற்போதைக்கு ஒரு நம்பிக்கையுணர்வு ஏற்பட்டிருக்கிறது.

வெற்றிபெற்ற பிறகு சபையில் உரையாற்றிய அவர் தன்னுடன் கைகோர்க்குமாறு எதிரணி தலைவர்களுக்கு- சிலரின் பெயர்களையும் குறிப்பிட்டு- அழைப்பு விடுத்தார். தற்போதைய சூறாவளிக்கு மத்தியில் அரசுக்கப்பலை நிலையுறுதிப்படுத்துவதற்கு தேவையான அறிவு வளமும் பல வருடகால ஆட்சிமுறை அனுபவமும் விக்கிரமசிங்கவுக்கு இருக்கிறது என்பது பொதுவில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

அரசியல் செயற்பாட்டாளர்களைத் தவிர பொதுவில் மக்கள் முடிவற்ற வீதிப்போராட்டங்களினாலும் அத்தியாவசியப் பொருட்களை பெறுவதற்காக நீண்ட வரிசைகளில் தினமும் காத்திருப்பதனாலும் களைத்துப் போய் விட்டார்கள். அவர்களுக்கு ஒரு ஓய்வு தேவைப்படுகிறது.


இது போராட்ட இயக்க தலைவர்களினாலும் குறைந்த பட்சம் மறைமுகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. பொலிசாரினால் பெறப்பட்ட நீதிமன்ற உத்தரவை மதித்து 104 நாட்களாக தாங்கள் முற்றுகையிட்டிருந்த போராட்டக்களத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளில் இருந்து வாபஸ் பெறுவதாக அவர்கள் அறிவித்தார்கள்.

இந்த நேர்மறையான நிகழ்வுப் போக்குகளுக்கு மத்தியில், அதுவும் போராட்டக்காரர்கள் தாங்களாகவே வாபஸ் பெறுவதாக அறிவித்த நேரத்துக்கு 12 மணித்தியாலங்கள் முன்னதாக அதிகாலை வேளையில் இராணுவமும் பொலிஸூம் கூட்டாக போராட்டக்களத்தில் தாக்குதல் நடத்தியதை விளங்கிக் கொள்வது கஷ்டமாக இருக்கிறது. அவர்கள் பட்டுக்கையு றையுடன் இரும்புக் கரங்களை காட்டி யிருக்கிறார்கள். போராட்டக்களத்தில் இருந்தவர்கள் மீது படையினரும் பொலிசாரும் தாக்குதல் நடத்தியதிலும் அவர்களை சித்திரவதை செய்ததிலும் காட்டிய முரட்டுத்தனம் பெரும் அதிர்ச்சியைத் தந்தது.

மூன்றாவது சக்தியொன்றும் அங்கு பிரசன்னமாக இருந்தது என்ற சந்தேகமும் உண்டு. சீருடையில் இருந்த ஆயுதப் படைகளுடன் சேர்ந்து நின்ற சிலர் மதுபோதையில் இருந்ததாக முறைப்பாடுகள் வந்திருக்கின்றன. சிவிலியன் குழுக்களை பாதுகாப்பு படைகள் எதிர்கொள்ளும்போது அத்துமீறல்கள் அல்லது பிழைபாடுகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் பெரும் பாலும் இந்த மூன்றாவது சக்தி என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது. மூன்றாவது சக்தியொன்று இருக்குமானால் அது அடையாளம் காணப்பட்டு வலுவழக்கச் செய்யப்பட வேண்டும்.

படையினரும் பொலிசாரும் மேற்கொண்ட தாக்குதல் உடனடியாவே கடுமையான கண்டனங்களுக்கு இலக்கானது. "அதிகாலை வேளையில் கொழும்பு காலிமுகத்திடலில் அமைதி வழி போராட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் கொடூரமானதும் அருவருக்கத்தக்கதுமாகும்" என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கூறியது. மேலும், ஒரு அரச அமைப்பான அந்த ஆணைக்குழு தாக்குதல்களை நடத்தியவர்கள் அடையாளம் காணப்பட்டு உகந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அரசாங்கத்தின் கட்டுப்பாட் டுக்குள் இருக்கக்கூடிய இராணுவத்தின் நடவடிக்கைகளோ அல்லது வேறு நடவடிக்கைகளோ மக்களின் அடிப்படை உரிமைகளை எதிர்காலத்தில் மீறாதிருப்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துவதற்கு தனது சொந்த விசாரணைகளும் நடத்தப்படும் என்றும் ஆணைக் குழு கூறியது. மக்கள் முன்னெடுக்கக் கூடிய எதிர்ப்பியக்கங்களை தடுக்க எதிர்காலத்தில் படைபலப் பிரயோகத்துடனான தலையீட்டை செய்வதற்கான ஒரு பரீட்சார்த்தமாக இந்த தாக்குதல் அமையக்கூடிய சாத்தியம் தடுக்கப்படவேண்டும்.



## பதற்றத் தணிவு

போராட்டக்காரர்கள் வெளியேறுவதற்கு சில மணி நேர அவகாசத்தை கொடுப்பதற்கு அரசாங்கம் தவறியமை கடுமையான விமர்சனங்களுக்கு வழி திறந்துவிட்டதுடன் அரசாங்கத்தை ஒரு தற்காப்பு நிலைக்கு தள்ளிவிட்டது. அமைதி வழி போராட்டக்காரர்கள் மீது இராணுவத்தினரும் பொலிசாரும் மேற்கொண்ட ஒருங்கிணைந்த தாக்குதலும் போராட்டக்களத்துக்கு அம்புலன்ஸ் வண்டிகளும் மருத்துவப்பணியாளர்களும் உடனடியாக வந்து சேருவதை தடுத்தது போன்ற செயல்களும் சர்வதேச நிதியுதவியை நாடு வேண்டி நிற்கின்ற ஒரு நேரத்தில் சர்வதேசத்தின் கண்டனத்துக்கு இலக்காகியிருக்கின்றன.

மனித உரிமைகள் நியமங்களும் பொறுப்புக்கூறும் கடப்பாட்டு கோட்பாடுகளும் பின்பற்றப்படவேண்டிய கட்டாயத்தை தங்களது உதவிகளுக்கான நிபந்தனையாக சர்வதேச நாணய நிதியமும் ஐரோப்பிய ஒன்றியமும் அறிவித்திருக்கின்றன. ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை இலங்கை தொடர்ந்தும் பெற வேண்டுமானால் மனித உரிமைகள் கடப்பாடுகளை நிறைவேற்றவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் அதன் அறிக்கையில் அரசாங்கத்துக்கு நினைவு படுத்தியிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

உணர்ச்சிகள் தீவிரமடைந்து சமுதாயம் துருவமயப்படக்கூடிய ஆபத்து இருக்கின்ற ஒரு நேரத்தில் அரசாங்கம் பதற்றநிலையை தணிப்பது அவசியமானதாகும். கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திர சமூகத்துடனான சந்திப்பொன்றில் ஜனாதிபதி மக்கள் அமைதி வழியில் ஒன்று கூடுவதற்கு இருக்கும் உரிமையை இலங்கை போற்றிப்பேணும் என்று உறுதியளித்ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்ட அறிக்கையொன்றில் கூறப்பட்டிருந்தது.

போராட்டங்களை நடத்துவதற்கு கொழும்பிற்குள் பல இடங்கள் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. காலிமுகத் திடல் பரந்தவெளி "அறகலய" போராட்ட இயக்கத்துக்கு கிடைக்கச் செய்த அளவு பிரகாசத்தை மற்றைய அரங்குகள் எந்தவொரு போராட்டத்துக்கும் கிடைக்கச் செய்வதற்கில்லை.



சர்வதேச நடைமுறைகள் பற்றி நிறையவே அறிந்திருப்பவர் என்று பெயரெடுத்த ஜனாதிபதி விக்கிரமசிங்க, போராட்டக்காரர்கள் அரசாங்கக் கட்டிடங்களை முற்றுகையிட்டு ஆக்கிரமிப்பது பற்றிய அமெரிக்க சிவில் உரிமைகள் ஒன்றியத்தின் நிலைப்பாட்டையும் இராஜதந்திரிகளிடம் சுட்டிக்காட்டினார். அவ்வாறான முற்றுகைகளோ ஆக்கிரமிப்புகளோ அனுமதிக்கக்கூடியவையல்ல என்று அவர் எடுத்துக்கூறினார்.

இராணுவ பலப் பிரயோ கம் ஒரு கட்டத்தில் பயனுடையதாகத் தோன்றலாம். ஆனால், மக்கள் இயக்கங்களைப் பொறுத்தவரை அது விளைவுகளை தாமதிக்கவே செய்யும். அது துரதிர்ஷ்டவசமானது. போராட்ட இயக்கத்தையும் தொடருகின்ற ஆர்ப்பாட்டங்களையும் கையாளுவதற்கு சிறந்த வழி அவர்களின் அக்கறைக்குரிய விடயங்களை கவனிப்பதேயாகும்.

பரந்தளவில் பொதுமக்களின் அக்கறைகளையே போராட்ட இயக்கமும் பிரதிபலிக்கிறது. மக்களின் ஆதரவு போராட்ட இயக்கத்துக்கு உண்டு. அந்த அக்கறைகளை கவனத்தில் எடுத்துச் செயற்பட்டால் அரசாங்கத்துக்கு நியாயப்பாடு கிடைக்க வழி ஏற்படும்.

போராட்ட இயக்கத்தில் சனத்தொகையின் சகல பிரிவினரும் தலைமுறைகள் மற்றும் இனப்பிளவுகள் கடந்து பங்கேற்றார்கள் என்பதை மனதிற்கொள்ளவேண்டியது அவசியமாகும். மீண்டும் தேவை ஏற்பட்டால் திகதி குறிப்பிடப்பட்டால் வீதிகளில் இறங்கி மாபெரும் போராட்டங்களை மக்கள் நடத்தக்கூடிய ஒரு ஆற்றலை போராட்ட இயக்கம் உருவாக்கியிருக்கிறது.

## நியாயப்பாட்டை மீள் நிலைநிறுத்தல்

போராட்ட இயக்கத்தின் வெற்றியே விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி பதவியைக் கிடைக்கச்செய்தது என்பது ஒரு முரண்நகையாகும். அந்த போராட்ட சக்தியே அவரை அதிகாரத்துக்கு கொண்டுவந்தது என்பதால் போராட்டக்காரர்களை தனது எதிரியாக அல்லாமல் நேர்மறையான வெளிச்சத்தில் நோக்க முடியுமாக இருந்தால் மாற்றத்துக்கான ஒரு சக்தியாக அது மிளிரும்.

போராட்ட சக்தியை முன்னரங்கத்துக்கு கொண்டுவந்தவை பொருளாதாரக் காரணிகளே. அந்தக் காரணிகள் இன்னமும் தொடர்ந்து இருக்கின்றன. அதனால் அவை தொடர்ந்தும் வலுவான சக்தியாகவே விளங்குகின்றன. ஜனாதிபதி தெரிவு முடிவு அறிவிக்கப்பட்ட உடனடியாகவே விக்கிரமசிங்க பதவி விலக வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்கள்.

ஆனால், சீர்திருத்தத்துக்கான அவர்களின் பிரதான கோரிக்கைகள் முற்றிலும் நியாயமானவை. பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்தக் கூடியதும் அரசாங்கத்தில் ஊழலுக்கு முடிவு கட்டக்கூடியதுமான முறைமை மாற்றமும் அந்த கோரிக்கைகளில் அடங்கும். உதவி வழங்கும் சர்வசே சமூகம் குறிப்பாக சர்வதேச நாணய நிதியமும் அதையே இலங்கையிடம் கோருகின்றன.

மேலும், ஜனாதிபதியை தெரிவு செய்த பாராளுமன்றப் பெரும்பான்மை மூன்று வருடங்களுக்கு முன்னர் தேர்தலில் மக்களால் வழங்கப்பட்ட ஆணையை அடிப்படையாகக் கொண்டது. புதிதாக தெரிவான ஜனாதி பதியினதும் முன் னைய அரசாங்கத்தின் அமைச்சர்களையே கொண்டதாக அவரால் நியமிக்கப்பட்ட அரசாங்கத்தினதும் நியாயப்பாடு பற்றிய பிரச்சினை ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கூறப்படுகின்ற முறைப்பாடுகளினால் மேலும் சிக்கலாக்கப்பட்டிருக்கிறது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகள் தேக்கு மரங்களைப் போன்று விலைக்கு வாங்கப்பட்டதாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் ஒருவர் பகிரங்கமாக குற்றஞ்சாட்டினார். தோற்கடிக்கப்பட்ட எதிரணி வேட்பாளர்களுக்கும் வெற்றிபெற்றவருக்கும் இடையிலான வாக்கு வித்தியாசம் எதிர்பார்த்திராத அளவுக்கு பெரிதாக இருந்தது. கட்சிகள் எடுத்த தீர்மானங்களுக்கு முரணாக அவற்றின் பாராளுமன்ற உறுப்பபினர்களை வாக்களிக்கச் செய்வதற்கு பெருமளவு பணம் கைமாறியதாக சமூக ஊடகங்களில் பெருவாரியான பதிவுகளைக் காணக் கூடியதாக இருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி கோதாபய ராஜபக்சவும் அவரின் கீழ் பிரதமராக இருந்தபோது ஜனாதிபதி விக்கிரமசிங்கவும் சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதாக உறுதியளித்திருந்தார்கள். அதன் காரணத்தினால்தான் அரசாங்கத்தின் இன்றைய ஆணை கேள்விக்கிடமான தன்மையுடையதாக இருக்கிறது. அரசாங்கத்தின் தற்போதைய நியாயப்பாட்டு நெருக்கடிக்கு (Crisis of legitimacy) ஒரே மாற்று மருந்தாக சர்வகட்சி அரசாங்கமே பரவலாக நோக்கப்படுகிறது. ஆனால் புதிய அரசாங்கத்தின் அமங்கலமான தொடக்கம் அத்தகைய சர்வகட்சி அரசாங்கத்தை ஜனாதிபதி அமைப்பதை மேலும் சிக்கலாக்கும் என்றே தெரிகிறது.


போராட்ட இயக்கம், எதிரணிக் கட்சிகள் மற்றும் சர்வதேச உதவி வழங்கும் சமூகம் ஆகியவற்றுடன் ஊடாட்டங்களைச் செய்யக்கூடிய நியாயப்பாடுடைய அரசாங்கம் ஒன்றை நிறுவுவதற்கு ஜனாதிபதி மிகவும் கடுமையாக பாடுபடவேண்டியிருக்கிறது.

தன்னை அதிகாரத்துக்கு கொண்டுவருவதற்கு வாக்களித்த கட்சி உட்பட கட்சிப்பிளவுகளுக்கு அப்பால் வெளிக்கிளம்புவதற்கான வாய்ப்பை ஜனாதிபதி விக்கிரமசிங்க கொண்டிருக்கிறார். அதற்கு மாற்று போராட்ட இயக்கத்துடனான மோதலாகவே இருக்கமுடியும். அதற்கான அறிகுறிகளை அண்மையில் காணக்கூடியதாக இருந்தது. மீண்டும் அவ்வாறு நிகழாதிருக்கவேண்டும் என்று நம்புவோமாக!

# புலமைச் சிகரம்


## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

............................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........          ii) 18 , 15 , 12 , ............. , ...........

21)

| | | |
|---|---|---|
| 3, | 9, | |
| | 6, | 14, |
| 10, | | 12, |

பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..................................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.....................................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

...................................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..................................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ....................................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | ............ | ......... |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.......................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



......................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

......................................................          (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)      2)      3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி     2) இரணைமடுக்குளம்     3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்     2) உதிப்பு     3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்     2) வாளேந்திய சிங்கம்     3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976     2) 1851     3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு     2) இறப்பர், தாழம்பூ     3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6     2) 8          **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130          2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745          **23.** 455
**24.** 1l 100ml / 1100ml          **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190     2) 100     3) 290
**27.** 15 : 30          **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1     **31.** 2     **32.** 3
**33.** 2     **34.** 3     **35.** 2

### கல்வி tv CHANNEL-1

**28.07.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2

**28.07.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# பிறந்த சிசு கொலை; வைத்தியர் கைது!

மட்டக்களப்பு, ஜுலை. 28

மட்டக்களப்பில் வைத்தியர் ஒருவரின் வீட்டில் வேலைக்காரியாக கடமையாற்றி வந்த பெண் ஒருவருக்கு பிறந்த சிசு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் ஐந்து வருடங்களின் பின்னர் வைத்தியர் ஒருவர், மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்ட குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த வைத்தியர் ஒருவர், மேல்மாடி வீதியில் வீடு ஒன்றில் வாடகைக்கு பெற்று தங்கியிருந்துள்ளார்.

இந்நிலையில், அவர் அம்பாறை - மத்தியமுகாமைச் சேர்ந்த 38 பெண்ணை தனது வீட்டு வேலைக்கு அமர்திய நிலையில், 2017 மார்ச் 26ஆம் திகதி குறித்த வேலைக்காரிக்கு ஆண் சிசு பிறந்துள்ளது.

அதனை சீலையால் சுற்றி, வீட்டின் கிணற்றில் வீசப்பட்டுள்ள நிலையில், வேலைக்காரிக்கு தொடர்ந்து இரத்தப் போக்குக் காரணமாக மார்ச் 26ஆம் திகதி மட்டு. போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனை தொடர்ந்து மார்ச் 31ஆம் திகதி தனது கிணற்றில் துர்நாற்றம் வீசுவதாக பொலிஸாருக்கு வைத்தியர் முறைப்பாடு செய்ததையடுத்து, பொலிஸார் கிணற்றை சோதனையிட்டனர்.

இதன்போது கிணற்றில் இருந்து சிசுவின் சடலத்தை மீட்டதுடன், வேலைக்காரியையும் கைது செய்து, விசாரணையை முன்னெடுத்தனர்.

இதன்போது, சிசு தனக்கும் வைத்தியருக்கும் பிறந்தாகவும் வைத்தியர்தான் வீட்டில் மகப்பேற்றை நடத்தியதாகவும் பின்னர் சிசிவை தான் கிணற்றில் வீசியதாகவும் தெரிவித்துள்ளார்.

பின்னர் அவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இதேவேளை, தனக்கும் சிசுவின் பிறப்பு மற்றும் இறப்புக்கு எவ்வித தொடர்பும் இல்லை என வைத்தியர் தெரிவித்த நிலையில், நீதிமன்ற உத்தரவுக்கமைய சிசுவின் இரத்த மாதிரியும் வைத்தியரின் இரத்த மாதிரியையும் பெற்று அரச பகுப்பாய்வுக்கு மரபணு பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இந்த மரபணுபரிசோதனையில் குறித்த வைத்தியரின் இரத்த மாதிரியும் சிசுவின் இரத்த மாதிரியும் ஒன்று எனவும் வைத்தியருக்கு பிறந்த சிசு என பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்ட அறிக்கையை அரச பகுப்பாய்வு திணைக்களம் பொலிஸாருக்கும் நீதிமன்றுக்கும் அனுப்பியுள்ளது.

இதனையடுத்து, மட்டு. பெரும் குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பரிசோதகர் சந்திரகுமார தலைமையிலான பொலிஸார் தொடர் விசாரணையில் திங்கட்கிழமை கண்டி வைத்தியசாலையில் கடமையாற்றிவரும் குறித்த வைத்தியரை பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்து, தனக்கு பிறந்த சிசுவை மறுத்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்ததுடன், அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்தனர். (அ)

# ஆல மரத்தில் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, ஜுலை. 28

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள மகிழடித்தீவு பிரதேசத்தில் காளி கோவில் ஆல மரத்தில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

மகிழடித்தீவு பாடசாலை வீதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 37 வயதுடைய குமாரசாமி திலகேஸ்வரன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குடும்பப் பிரச்னை காரணமாக, சம்பவத்துக்கு முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை இரவு வீட்டின் கிணற்றில் குதித்து உயிரை தனது மாய்த்துக் கொள்ள குத்த நிலையில் குறித்த நபர் காப்பாற்றப்பட்டார்.

இதனை தொடர்ந்து சம்பவ தினமான மறுநாள் அதிகாலை அவரது மனைவி ஆடைத் தொழிற்சாலைக்கு வேலைக்கு செல்ல எழுந்து கணவரை தேடியபோது அவரை வீட்டில் காணவில்லை. எனவே, அவர் அருகில் சென்றிருக்கலாம் என நினைத்து அவர் வேலைக்குச் சென்றுள்ளார்.

இந்த நிலையில் 8.30 மணிக்கு அந்த பகுதியிலுள்ள காளி கோவில் மூலஸ்தானப் பகுதியிலுள்ள ஆல மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

நீதிமன்ற உத்தரவுக்கமைய, பிரேத பரிசோதனைக்காக மட்டு. போதனா வைத்தியசாலையில் சடலத்தை ஒப்ப டைத்துள்ளதாக கொக்கட்டிச் சோலை பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இடி, மின்னலால் வீடுகளுக்கு சேதம்

மட்டக்களப்பு, ஜுலை. 28

வாழைச்சேனையில் ஏற்பட்ட இடி, மின்னல் தாக்கம் காரணமாக பிரதேசத்தின் பல வீடுகளுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், வீடுகளிலிருந்த மின்சாரப் பொருட்களும் சேதமாகியுள்ளன.

வாழைச்சேனை, விநாயகபுரத்தில் இரு வீடுகளில் தென்னை மரங்களில் இடி, மின்னல் தாக்கம் ஏற்பட்டதால் தீப் பற்றியுள்ளது. வீட்டின் கூரையின் மீது தீ பரவியதையடுத்து அயலவர்கள் தீயை கட்டுப்படுத்தினர்.

குறித்த வீடுகளில் வசித்தோர், உறவினர்களின் வீடுகளுக்கு சென்றிருந்ததால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படாமல் தடுக்கப்பட்டுள்ளது.

ஆனால், அப்பிரதேசத்தின் பல வீடுகளில் பாவனையில் இருந்த மின் பாவனைப் பொருட்கள் பல சேதமடைந்துள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்தனர். (அ)

# வீட்டை உடைத்து கொள்ளை; 2 பெண்கள், 3 ஆண்கள் கைது

அம்பாறை, ஜுலை. 28

ஏறாவூர் பிரதேசத்தில் வீடு ஒன்றை உடைத்து அங்கிருந்து 8 கால் பவுண் நிறையுடைய தங்க ஆபரணங்களை கொள்ளையிட்ட இரு பெண்களும் மூன்று ஆண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மிச்சு நகர் பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 20 மற்றும் 45 வயதுடைய பெண்கள் உட்பட ஐவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட பெண்ணொருவர் மற்றும் இரு ஆண்களிடமிருந்து ஹெரோய்ன் போதைப்பொருளை மீட்டுள்ளதாகவும் ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளையிடப்பட்ட தங்க ஆபரணங்களை சந்தேகநபர்களிடமிருந்து மீட்டதுடன், அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில், தங்கச் சங்கிலியை மட்டக்களப்பு நகர் நகைகடை ஒன்றில் அடகு வைத்திருந்த நிலையில் மீட்கப்பட்டதையடுத்து, கொள்ளையிடப்பட்ட 8 கால் பவுண் தங்க நகைகளை பொலிஸார் மீட்டனர்.

ஏறாவூர், ஆர்.சி. வீதியிலுள்ள வீடு ஒன்றின் பின்பகுதி கதவை உடைத்து, அறையில் அலுமாரியில் இருந்த 8 கால் பவுண் தங்க ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்டமை தொடர்பில் உரிமையாளரால் வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# வீட்டு உபகரணங்கள் திருட்டு; எண்மர் பொலிஸாரால் கைது

திருமலை, ஜுலை. 28

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஒன்பது இலட்சம் ரூபாய் பெறுமதியான வீட்டு உபகராணங்களை திருடிய குற்றச்சாட்டில் 08 பேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை மற்றும் பாலையூற்று பகுதியைச் சேர்ந்த 25 வயதிலிருந்து 45 வயதுக்குட்பட்ட எட்டுப் பேரையே கைது செய்துள்ளதாக திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை பகுதியுள்ள வீடொன்றை உடைத்து அங்கிருந்த மின்விசிறி, தையல் இயந்திரம், ஒலிப் பெருக்கி சாதனங்கள், இசைக்கருவி மற்றும் மின்னழுத்தி போன்ற உபகரணங்களை திருடி, சந்தேக நபர்கள் விற்பனை செய்துள்ளதாக, ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

சந்தேகநபர்களை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு, திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

# ஓட்டமாவடியில் நகை கொள்ளை!

மட்டக்களப்பு, ஜுலை. 28

வீட்டு அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த நகைகள் திருடப் பட்டுள்ள சம்பவமொன்று நேற்று முன்தினம் வாழைச் சேனை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட ஓட்டமாவடி - 2 ஆம் வட்டாரத்திலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

வீட்டு உரிமையாளார்கள் தூங்கிக் கொண்டிருந்த போது வீட்டினுள் நுழைந்த திருடன் அங்கிருந்த நகைகளை திருடிச்சென்றுள்ளான்.

வீட்டிலிருந்த சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான 6 பவுண்தங்க நகைகளை திரு டன் திருடிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நகைகளை திருடிய திருடன் அங்கிருந்து செல்லும் காட்சி சி.சி.ரி.வி கமராவில் பதிவாகியுள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச் சேனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அண்மைக்காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதால் மக்கள் பெரிதும் அச்சத்துடன் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# திருகோணமலையில் ஓட்டோக்களை பதிவு செய்து பதிவு ஸ்ரிக்கர் வழங்கல்



திருமலை, ஜுலை. 28

எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு காணும் நோக்கில் முச்சக்கரவண்டிகளை பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்து பதிவு ஸ்டிக்கர் வழங்கும் நிகழ்வு திருகோணமலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள முச்சக்கர வண்டிகளுக்கு ஏற்ற வகையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களை ஒதுக்கும் செயற்பாடு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

உவர்மலை,மட்கோ,லிங்கனகர் மற்றும் அபயபுர ஆகிய கிராம சேவகர் பிரிவுகளை சேர்ந்த முச்சக்கர வண்டி சாரதிகளின் வாகனங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் நேற்று காலை திருகோணமலை தலைமையக பொலிஸ் நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

குறித்த பகுதிகளைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு அருகிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் பெறுவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஓட்டோ சாரதிகள் தமது வாகனங்களை முன்கூட்டியே பதிவு செய்து தமது ஸ்ரிக்கர்களை பெற்றுக்கொள்ளுமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

ஏனைய கிராம சேவகர் பிரிவுகளுக்கு இத் திட்டம் எதிர்வரும் நாட்களில் தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்டு செயல்படுத்தபடும் என பொலிஸார் கூறினர். (அ)



## பிலிப்பைன்ஸில் நேற்று அதிகாலை 7.1 ரிச்டர் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

மணிலா, ஜுலை 28

பிலிப்பைன்ஸ் தீவான லுரசானில் நேற்று புதன் கிழமை அதிகாலை 7.1 ரிச்டர் அளவிலான சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

தலைநகர் மணிலா உள்ளிட்ட பல பகுதிகளில் சக்திவாய்ந்த நிலநடுக்கத்தின் தாக்கங்கள் உணரப் பட்டன.

10 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தில் ஏற்பட்ட சேதங்கள் குறித்த தகவல்கள் உடனடியாக வெளியாகவில்லை.

நில அதிர்வின் மையம் அப்ரா மாகாணத்தில் உள்ள டோலோரஸ் நகரத்திலிருந்து கிழக்கு-தென்கிழக்கே சுமார் 11 கி.மீ.தொலைவில் இருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கம் வலுவாக உணரப்பட்டதாக வடக்கு இலோகோஸ் சுர் மாகாணத்தில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் எரிக் சிங்சன் தெரிவித்துள்ளார்.

பயங்கர நிலநடுக்கம் 30 வினாடிகள் அல்லது அதற்கு மேல் நீடித்தது. என் வீடு இடிந்து விழுந்து விடும் என்று நான் நினைத்தேன். அதிர்வு அவ்வாறு மோசமாக இருந்தது என்று சிங்சன் கூறினார்.

தொடர்ந்தும் சிறியளவிலான நில அதிர்வுகள் ஏற்படுகின்றன. எனவே நாங்கள் எங்கள் வீட்டிற்கு வெளியே தான் இருக்கிறோம் எனவும் அவர் குறிப் பிட்டார்.

நிலநடுக்கம் தலைநகர் மணிலாவிலும் வலுவாக உணரப்பட்டது. இதனையடுத்து நகரில் ரயில் சேவைகள் அவசர கதியில் நிறுத்தப்பட்டதாக போக் குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

நிலநடுக்கம் சில பகுதிகளில் சேதங்களை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் மணிலாவில் சேதங்கள் ஏற்பட்டதாக தகவல் இல்லை என மாநில நில அதிர்வு அமைப்பின் பணிப்பாளர் ரெனாடோ சொலிடம் தெரி வித்துள்ளார். (அ)

### தாய்வான் விவகாரம், உக்ரைன் போர் குறித்து

# பைடன் - ஜி ஜின்பிங் இன்று பேச்சுவார்த்தை

நியூயோர்க், ஜுலை 28

தாய்வான் விவகாரம் மற்றும் உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக் கிரமிப்பு குறித்த பதற்றங்களுக்கு மத்தியில் இவ்விவகாரங்கள் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் ஆகியோர் இன்று வியா ழக்கிழமை மெய்நிகர் வழியில் பேச வுள்ளனர்.

இப்பேச்சுவார்த்தையில் அமெ ரிக்கா - சீனா இடையிலான பொரு ளாதார போட்டியால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் இதன்போது இரு தலைவர்களும் ஆராய்வார்கள் என வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் ஜோன் கிர்பி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்க ளிடம் தெரிவித்தார்.

இது இரு தலைவர்களுக்கும் இடையிலான ஐந்தாவது மெய்நிகர் வழி சந்திப்பாகும்.

அமெரிக்க பாராளுமன்ற அவைத் தலைவர் நான்சி பெலோ சியின் உத்தேச தாய்வான் பயணத் திட்டத்திற்கு சீனா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

நான்சி பெலோசியின் தாய் வானுக்கான பணத்தை தொடர



அமெரிக்கா வலியுறுத்தினால் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை பாதுகாக்க உறு தியான மற்றும் வலுவான நடவடிக் கைகளை சீனா எடுக்கும் என்று சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியன் திங்கட்கிழமை பீஜிங்கில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது கூறினார்.

பெலோசியின் தைவானுக்கான உத்தேச பயணத்திற்கு உறுதியான எதிர்ப்பை அமெரிக்கத் தரப்பிற்கு பலமுறை சீனா தெளிவுபடுத்தி யுள்ளது.

அதை மீறி பெலோசி தாய்வான் பயணம் செய்தால் அதனால் ஏற் படும் கடுமையான விளைவுகளுக்கு அமெரிக்கா முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.எந்த ஒரு சூழ்நிலை யையும் எதிர்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியன் தெரிவித்தார்.

தாய்வான் விவகாரத்தில் சீனா - அமெரிக்கா இடையிலான தீவிர பனிப்போருக்கு மத்தியில் அமெ ரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் இடையே நாளை இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. (அ)

# சர்வதேச விண்வெளி மையத்திலிருந்து வெளியேறுவதாக அறிவித்தது ரஷ்யா!

மொஸ்கோ, ஜுலை 28

2024 ஆம் ஆண்டுக்கு பின்னர் சர்வதேச விண்வெளி நிலையத்தி லிருந்து வெளியேறி அதற்கு பதி லாக தனது சொந்த நிலையத்தை உருவாக்கப்போவதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவும் ரஷ்யாவும் ஏனைய நாடுகளுடன் இணைந்து 1998 முதல் முதல் சர்வதேச விண் வெளி நிலையத்தில் வெற்றிகரமாக இணைந்து பணியாற்றி வருகின்றன.

ஆனால் ரஷ்யா உக்ரைனை ஆக்கிரமித்ததில் இருந்து இந்த உற வுகள் மோசமடைந்துள்ள நிலை யில் ரஷ்யாவின் விண்வெளி நிறு வன புதிய தலைவர் இதனை தெரி வித்துள்ளார்.

ஐந்து விண்வெளி நிறுவனங் களை உள்ளடக்கிய இந்த கூட்டு திட்டம், 1998 முதல் பூமியைச் சுற்றி வருகின்றதோடு ஆயிரக் கணக் கான அறிவியல் சோதனைகளை நடத்த பயன்படுத் தப்பட்டது.

எனினும் உடன்படிக்கையுடன் மேலும் ஆறு ஆண்டுகளுக்கு நீடிக்க அமெரிக்கா விரும்புகின்ற நிலையில் ஜனாதிபதி விளாடிமிர் புட்டினு டனான சந்திப்பின் பின்னர் இந்த முடிவு அறிவிக்கப் பட்டுள்ளது.

எனினும் இது குறித்து அமரிக்க விண்வெளி நிறுவனத்துக்கு இன் னும் உத்தியோகப்பூர்வமாக அறிக் கவில்லை என ரஷ்யாவின் விண் வெளி நிறுவன தலைவர் குறிப் பிட்டுள்ளார்.

# பழங்குடி கனேடியர்களுக்கு இழைத்த அநீதிக்கான பழியை றோமன் கத்தோலிக்க திருச்சபை ஏற்றுக்கொள்ளவேண்டும்

### பாப்பரசர் பிரான்சிஸ் கருத்து

ஒட்டாவா, ஜுலை 28

கனேடிய குடியிருப்புப் பள் ளிகளில் பழங்குடி கனேடியர்க ளுக்கு இழைக்கப்பட்ட தீங்குக ளுக்கான பழியை ரோமன் கத்தோலிக்க திருச்சபை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பாப்பரசர் பிரான்சிஸ் செவ் வாய்க்கிழமை கூறினார்.

கனடா - எட்மண்டனுக்கு மேற்கே 70 கி.மீ. தொலைவில் உள்ள பழங்குடி கனேடிய கத் தோலிக்கர்கள் அதிகம் கூடும் பிரபல வழிபாட்டு தலத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஆசிர்வாத பூசையில் திரண்டி ருந்த மக்கள் மத்தியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பழங்குடி மக்களின் பாரம் பரியங்களுடன் வரவேற்கப் பட்ட பாப்பரசர், சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த வாறு அங்கு கூடியிருந்தவர் களை ஆசீர்வதித்தார்.

கனடாவில் பழங்குடி சகோதர சகோதரிகள் அனுபவித்த வன்முறைகள் மற்றும் கொலனித்துவத்தின் பயங்கரமான விளைவுகள் குறித்து இதன்போது பாப்பரசர் கருத்து வெளியிட்டார்.

முன்னதாக நேற்று முந்தி னம் கனடாவில் கத்தோலிக்க திருச்சபைகளால் நடத்தப்பட்ட குடியிருப்பு பள்ளிகளில் பழங் குடியின சிறுவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக் காக பாப்பரசர் பிரான்சிஸ் மன் னிப்பு கோரினார்.

கனடாவின் எட்மண்டன் அருகே உள்ள மாஸ்க்வாசிஸ் - செவன் சோரோஸ் கத்தோலிக்க



தேவாலயத்தில் கூடியிருந்த சுமார் 2.000 வரையான பழங் குடி சமூகத்தினர் மத்தியில் பாப்பரசர் மன்னிப்பு கேட் டார்.

உலக கத்தோலிக்க திருச் சபையின் தலைவரான பாப் பரசர் பிரான்சிஸ் 6 நாட்கள் பயணமாக ஞாயிற்றுக்கிழமை இரவு கனடா சென்றடைந்தார்.

கனடா வந்திறங்கிய அவரை கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ஆளுநர் நாயகம் மேரி சைமன், பழங்குடி மக்க ளின் பிரதிநிதிகள் உள்ளிட் டோர் வரவேற்றனர்.

கனடாவில் குடியிருப்புப் பள்ளிகளில் பழங்குடியின குழந்தைகள் அனுபவித்த துஷ்பிரயோகங்களுக்காக ரோமன் கத்தோலிக்க திருச் சபையின் சார்பாக பகிரங்க மன்னிப்பு கோருவதே பாப் பரசர் பிரான்சிஸின் இந்தப் பயணத்தின் நோக்கமாக இருந் தது. (அ)




# பாகிஸ்தானின் வெற்றிக்கு இலங்கை இமாலய இலக்கு

*காலி, ஜூலை 28*

இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணிக்கு 508 ஓட்டங்கள் என்ற மிகப்பெரிய இலக்கை நிர்ணயித்துள்ளது இலங்கை அணி.

இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் அணியுடன் காலியில் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடி வருகிறது இலங்கை அணி.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இனிங்ஸில் 378 ஓட்டங்களை எடுத்தது. பதிலுக்கு பாகிஸ்தான் அணி 231 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்திருந்தது. இதையடுத்து, இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 5 விக்கெட்கள் இழப்புக்கு 176 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவடைந்தது.

நேற்று நான்காம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த இலங்கை அணி, திமுத் கருணாரத்ன 27, தனஞ்சய டீ சில்வா 30 ஓட்டங்களுடன் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். இருவரும் நிதானமாக ஆடி அரைச்சதங்களை கடந்தனர். கருணாரத்ன 61 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

சதத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த தனஞ்சயவுக்கு 9ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ரமேஷ் மெண்டிஸ் அபாரமாக துணை நின்றார். இதனால், தனஞ்சய டீ சில்வா தனது 9ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார். அவர் 109 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்த நிலையில், இலங்கை அணி 91.5 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 360 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ரமேஷ் மெண்டிஸ் ஆட்டமிழக்காமல் 45 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

பாகிஸ்தானின் பந்துவீச்சில் நசீம் ஷா, முஹமட் நவாஸ் தலா 2 விக்கெட்களையும், யசீர் ஷா, நமுன் அலி, சல்மான் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு ஆடிய பாகிஸ்தான் அணிக்கு தொடக்கம் கொடுத்த சபியூ 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தார்.

போதிய வெளிச்சமின்மையால் நேற்றைய ஆட்டம் நிறுத்தப்பட்டது. அப்போது, பாகிஸ்தான் அணி 28 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 89 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இமாம் உல் ஹக் 46, பாபர் அஸாம் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பிரபாத் ஜெயசூரியா ஒரு விக்கெட்டை வீழ்த்தியிருந்தார்.இன்று போட்டியின் இறுதிநாளாகும். (ஐ)

# பொதுநலவாய விளையாட்டு; யாழ்ப்பாண வீரர் பங்கேற்பு!

*யாழ்ப்பாணம், ஜூலை 28*

பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த யோகநாதன் சிம்ரோன் (வயது 22) என்ற வீரர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் இலங்கையின் கூடைப் பந்தாட்ட அணி சார்பாக இந்தப் போட்டியில் பங்கேற்கவுள்ளார்.

சிறுவயதில் இருந்து கூடைப் பந்து விளையாட்டில் ஆர்வமுடைய இவர், பல்வேறுபட்ட போட்டிகளில் பங்கேற்றுள்ளார். இலங்கையில் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய அணியின் பிரதித் தலைவராகவும் செயல்பட்டுள்ளார்.




பொதுநலவாய விளையாட்டுப் போட்டியின் கூடைப்பந்தாட்டத்தில் இலங்கை தற்போதுதான் முதன்முறையாக போட்டியிடுகிறது. அதில் கலந்து கொள்ளும் முதலாவது தமிழ் இளைஞர் இவரென்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த ஐந்து வருடமாக யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் தொடர்ந்து விளையாடி வருவதுடன், மட்டக்களப்பில் நடத்தப்பட்ட தேசிய போட்டிகளில் வெற்றியையும் தனதாக்கி கொண்டுள்ளார்.

சிம்ரோன், மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையில் கல்விகற்றார். இவரின் பயிற்றுநராக ஆரம்பம் முதல் ஜெயபாலன் ஜெசந்தன் செயல்பட்டு வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரி - 20 உலகக்கிண்ணம் ஆஸி. அணி வெல்லும்!

## றிக்கி பொண்டிங் கணிப்பு

*சிட்னி, ஜூலை 28*

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபது -20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி அவுஸ்திரேலியாவில் வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறுகிறது.

இந்தத் தொடர் அவுஸ்திரேலியாவின் அடிலெய்ட், மெல்பர்ன், சிட்னி போன்ற புகழ்பெற்ற மைதானங்களில் நடைபெறுகிறது.

இந்தத் தொடரில் 16 அணிகள் பலப்பரீட்சை நடத்த உள்ளன. கடந்த 2021இல் டுபாயில் நடந்த இருபது -20 உலகக்கிண்ணத்தை முதன்முறையாக வென்ற அரோன் பின்ஞ் தலைமையிலான அவுஸ்திரேலியா இம்முறை கிண்ணத்தைத் தக்க வைக்க சொந்த மண்ணில் களமிறங்குகிறது.

இந்த தொடரில், இலங்கை அணி தகுதிச் சுற்றில் ஆடியே பிரதான சுற்றுக்குள் நுழையவுள்ளது.

இந்தியா தனது முதல் போட்டியில் பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

இந்த இருபது -20 உலகக் கிண்ணத்தின் இறுதிப் போட்டியில் விளையாட போவது யார் மற்றும் வெற்றியாளர் யார் என்பதை அவுஸ்திரேலிய ஜாம்பவான் றிக்கி பொண்டிங் கணித்துள்ளார்.

அவர், “இறுதிப் போட்டியில் இந்தியாவும் அவுஸ்திரேலியாவும் பலப்பரீட்சை நடத்தும். இறுதிப் போட்டியில் இந்தியாவை அவுஸ்திரேலியா தோற்கடிக்கும் என்று கருதுகிறேன். ஏனெனில், நடப்பு சம்பியனான அவர்களுக்கு சொந்த மண் சூழ்நிலைகள் சாதகமாக உள்ளது.

வெள்ளை பந்து கிரிக்கெட்டில் இங்கிலாந்து மிகச்சிறந்த அணி என்று நான் நினைக்கிறேன். தற்போதைய நிலைமையில் இந்தியா, அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து ஆகிய 3 அணிகளில் மட்டுமே உலகத்தரம் மற்றும் அதிரடியான ஆட்டவெற்றியாளர்கள் நிறைந்துள்ளார்கள்.

இதேபோல் பாபர் அஸாம் ஓட்டங்களை எடுக்கவில்லை என்றால் பாகிஸ்தானுக்கு வாய்ப்பு இருப்பதாக எனக்கு தோன்றவில்லை. நியூசிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள், பாகிஸ்தான் ஆகிய அணிகளும் எதிர்பாராத வகையில் அபாரமாக செயல்பட்டு இறுதிப்போட்டிக்குள் நுழைய வாய்ப்பு உள்ளன என்று கூறியுள்ளார்.





# ரென்னிஸை விட்டு விலக நினைத்தேன்!

## மனம் திறந்தார் எம்மா

*லண்டன், ஜூலை 28*

கிராண்ட்ஸலம் போட்டியா அமெரிக்க ஓப்பன் ரென்னிஸில் பட்டம் வென்று பிரபலமானவர் எம்மா ரடுகானு. மிக இளம்வயதினரான இவர் ரென்னிஸ் போட்டியை விட்டு விலகிவிட விரும்பினார் என்று தெரிவித்தமை ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க கிராண்ட்ஸ்லாம் வென்றதன் மூலம் மிக இளம் வயதில் ரென்னிஸ் அரங்கின் முக்கிய நட்சத்திரமாக இங்கிலாந்து நாட்டை சேர்ந்த எம்மா ரடுகானு மாறினார் 19 வயதே ஆன எம்மா ரடுகானு. மேலும் உலகின் உயரிய விளையாட்டு விருதுகளில் ஒன்றான லோரஸ் விருதை இந்த ஆண்டு எம்மா ரடுகானு வென்றார்.

இந்த நிலையில் ரென்னிஸ் விளையாட்டை விட்டு விலக நினைத்தீர்களா என்ற கேள்விக்கு அவர் தற்போது பதில் அளித்துள்ளார். அதில், “நிச்சயமாக நினைத்தேன். நான் பொய் சொல்லப் போவதில்லை. கொரோனா தொற்று நோய்களின்போது மிகவும் கடினமாக இருந்தது. ஏனென்றால் அப்போது சூழ்நிலைகள் மிகவும் சவாலானவை. என்னால் பயிற்சி செய்ய முடியவில்லை. நான் எட்டு மாதங்கள் பயிற்சி பெறவில்லை. ஆனால், அதன் மூலம் நான் வலுவாக இருக்க முடிந்தது என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

மேலும் சில சமயங்களில் நீங்கள் அப்படி நினைக்கலாம். அதே நேரத்தில் அது போன்ற சமயங்களில் நீங்கள் உண்மையிலேயே சோர்வாக உணர்ந்தால் , அடுத்து ஏதாவது நல்லது நடக்கும் என்று நீங்கள் ஆறுதல் அடைய வேண்டும். ஏனென்றால், மோசமான சூழ்நிலைகள் எப்போதும் நிலைக்காது - என்றும் கூறினார். (ஐ)

# சர்வகட்சி அரசின் அமைச்சரவையில் ராஜபக்ஷக்கள் எவருமே வேண்டாம்!

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 28

**“புதிதாக அமையவுள்ள சர்வகட்சி அரசின் அமைச்சரவையில் ராஜபக்சக்கள் எவரும் அங்கம் வகிக்கக்கூடாது. அவர்களுடைய ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் ஆதிக்கம் செலுத்தக் கூடாது. அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கியவாறு சர்வகட்சி அரசு அமைவதே நாட்டுக்கு நல்லது.”**

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இருவரையும் மக்கள் விரும்பவில்லை. இதனால்தான் மக்கள் நாடெங்கும் போராட்டம் நடத்தினார்கள்.

புதிய ஜனாதிபதியை பாராளுமன்றம் தெரிவு செய்துள்ளது. புதிய பிரதமரை ஜனாதிபதி தனக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி தெரிவு செய்துள்ளார்.

இந்த நிலையில், இடைக்கால சர்வகட்சி அரசு அவசியம். தனியொரு கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஆட்சியைக் கொண்டு நடத்த முடியாது. அனைவரது ஒத்துழைப்பும் ஆலோசனைகளும் மிகவும் அவசியம். ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு என்ற பேதம் இல்லாமல் சர்வகட்சி அரசு அமையவேண்டும்.

இதேவேளை, புதிய பிரதமர் தொடர்பில் சர்வகட்சி அரசுதான் தீர்மானிக்க வேண்டும்- என்றார். (அ)

# அதிகரிக்கின்றது கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கை

## சுகாதாரப் பழக்க வழக்கங்களை கண்டிப்பாக பின்பற்ற வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 28

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் சுகாதாரப் பழக்க வழக்கங்களை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் மருத்துவ தொழில் நுட்ப சேவைகள் பிரிவின் பணிப்பாளரும் மருத்துவ உதவிகள் தொடர்பிலான இணைப்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானி இதனை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை 119 கொரோனா தொற்றாளர்கள் பதிவாகியிருந்தது டன், கொரோனா தொற்றுக்குள்ளான ஐவர் உயிரிழந்துள்ளனர்.

சில மாதங்களுக்குப் பிறகு கொரோனா இறப்புகள் பதிவாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையில், நாட்டில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், பொது இடங்களில் முகக்கவசம் அணியுமாறு சுகாதாரத் துறை அதிகாரிகள் மக்களிடம் கோரியுள்ளனர். (அ)

# மரண அறிவித்தல்

மலர்வு
19 - 02 -



உதிர்வு
24 - 07 - 2022

## திருமதி நிர்மலாதேவி தவலிங்கம்

### (சாந்தி, நிர்மலா, நிம்மி)

யாழ். பருத்தித்துறை தும்பளையைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வை வதிவிடமாகவும் கொண்ட நிர்மலாதேவி தவலிங்கம் அவர்கள் 24.07.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சோமசுந்தரம், சிவயோகம் தம்பதிகளின் அன்பு மகளும்,தவலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், மதுரா அவர்களின் ஆசைமிகு தாயாரும்,சுசிலாதேவி, ஸ்ரீநிவாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

பார்வைக்கு
Thursday, 28 Jul 2022 2:00 PM - 4:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை
Thursday, 28 Jul 2022 4:00 PM - 5:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம்
Thursday, 28 Jul 2022 5:00 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario> L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்பைக் காட்டியே ஆட்கொண்டு அலங்கரித்து
இன்புறக் கற்பித்து இருப்பவற்றைப் பகிர்ந்தளித்து
பன்னிரு திருமுறையும் பாங்குடன் தமிழும் சேர
சர்வமும் கடவுளென்று சந்நிதியில் தவமிருந்து
கர்வம் ஏதுமின்றி கடமைகளை நிறைவேற்றி
நிர்க்கதியாய் நிற்போர்க்கு நித்தமும் உதவிசெய்த
நிர்மலாதேவியவள் நிமலனடி சேர்ந்தாளே

தகவல்:
ஸ்ரீநிவாசன் - சகோதரன்:.

தொடர்புகளுக்கு:
**ஸ்ரீநிவாசன் - சகோதரன்** Mobile : +16472951110
**ரவிச்சந்திரன் - உடன் பிறவாச் சகோதரர்** Mobile : +14164561578
**சுசிலாதேவி - சகோதரி** Mobile : +16473902367



# புலோலி பலநோக்கு கூட்டுறவு சங்க எரிபொருள் நிலையத்தில் குழப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

பருத்தித்துறை புலோலி பலநோக்கு கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கியூ.ஆர். கோர்ட்க்கு மாத்திரமே எரிபொருள் விநியோகிக்கப்படும் என தெரிவிக்கப்பட்ட நிலையில் குழப்ப நிலை உருவாகியது.

பருத்தித்துறை புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காலை முதல் மக்கள் எரிபொருளுக்காக காத்திருந்த நிலையில் மாலை வேளையில் நிரப்பு நிலையத்துக்கான எரிபொருள் வந்துள்ளதாகவும்,

எரிபொருள் வந்த பின் கியூ. ஆர் கோர்ட்க்கு மாத்திரமே எரிபொருள் விநியோகிக்கப்படும் என தெரிவிக்கப்பட்ட நிலையில் பொதுமக்களுக்கும் எரிபொருள் நிரப்பு நிலைய தரப்பினருக்குமிடையே முறுகல் நிலை உருவாகியது.

அதனை தொடர்ந்து குறித்த இடத்துக்கு இராணுவத்தினர் அழைக்கப்பட்டு குழப்பநிலை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. (அ)

# மஹிந்த ,பஸிலுக்கு பயணத்தடை நீடிப்பு

கொழும்பு, ஜூலை 28

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோருக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணத்தடை நீடிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இலங்கையை விட்டு வெளியேறுவதைத் தடுக்கும் வகையில் உயர் நீதிமன்றம் ஓகஸ்ட் 02 ஆம் திகதி வரை பயணத் தடையை நீட்டித்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் 2022 ஜூலை 28 ஆம் திகதி வரை நாட்டை விட்டு வெளியேறத் தடை விதித்து உயர் நீதிமன்றம் ஏற்கனவே ஜூலை 15 ஆம் திகதி உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வவுனியா மாவட்ட வைத்தியசாலை சுகாதாரப் பணியாளர் ஆர்ப்பாட்டம்!

வவுனியா, ஜூலை 28

வவுனியா மாவட்ட வைத்தியசாலை சுகாதார பணியாளர்களினால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.



சுகாதாரப் பணியாளர்களுக்கென விசேட தினத்தில் தனியொரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் வழங்கவேண்டும் என கோரியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த காலங்களில் வைத்தியசாலை பணியாளர்களுக்காக விசேட தினத்தில் தனியொரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

எனினும் இச்செயற்பாடானது கடந்த சில நாட்களாக நிறுத்தப்பட்டதுடன், பொதுமக்களின் வரிசையின் ஊடாகவே எரிபொருளைப் பெற்றுக் கொள்ளவேண்டிய நிலையே தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் தமது கடமைக்கு உரிய நேரத்துக்கு செல்வதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் அவர்கள் குற்றம் சுமத்தினர்.

மேலும் இந்நிலை மாற்றப்பட்டு தமக்கென தனியான ஒரு தினத்தில் எரிபொருள் வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனகோரிக்கை விடுக்கப்படுவதுடன் இந்நிலை தொடருமாயின் தொடர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (அ)

## பயங்கரவாத...

பாராளுமன்றில் ஜனாதிபதி தெரிவு நடப்பதற்கு முன்னதாக விக்னேஸ்வரன் எம். பியிடம் ரணில் விக்கிரமசிங்க ஆதரவு கேட்டிருந்தார். இந்தப் பின்னணியில் சில கோரிக்கைகளை நிறைவேற்ற விக்னேஸ்வரன் எம். பி. அவரைக் கோரினார். அவற்றில் அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட சிலவற்றை நிறைவேற்ற ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்திருந்தார்.

இந்நிலையில், உறுதியளித்தபடி அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி விக்னேஸ்வரன் எம். பி. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்று முன்தினம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அந்தக் கடிதத்திலேயே மேற்கண்டவாறு அவர் வலியுறுத்தியிருந்தார்.

மேலும், பயங்கரவாத தடை சட்டம் மற்றும் அவசரகால விதிகளின் கீழ் பொலிஸாரின் வாக்குமூலங்களை மட்டுமே நம்பி ஏற்கப்பட்டு தண்டிக்கப்பட்டவர்கள். வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்ட குற்றம் உண்மையில் இடம்பெற்றதா என்பதை உறுதிப்படுத்தாமல் சந்தேகநபர்கள் குற்றவாளிகளாக அறிவிக்கப்படுகின்றனர். இந்தக் குற்றங்கள் உண்மையில் நடந்ததா என்பதை சுயாதீனமாக உறுதிப்படுத்தாமல் கிட்டத்தட்ட அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் தண்டனை பெற்றுள்ளனர்.

பயங்கரவாத தடை சட்டம் 1979இல் தற்காலிகமாக இயற்றப்பட்டது. தமிழ் இளைஞர்களை தண்டிக்கவோ போதைப் பொருள் குற்றவாளிகளை சிறையில் அடைப்பதற்காகவோ மட்டுமே. இவ்வளவு காலம் நீடிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத தடை சட்டம் என்பது நமது குற்றவியல் சட்டத்தின் கொள்கைகளுக்கு முரணான ஒரு சட்டம். இதை மீளப்பெறுமாறு ஐ. நா. சபை அரசாங்கத்தைக் கேட்டிருந்தது. இலங்கை அரசாங்கமும் இதற்கு சம்மதித்திருந்தது. இந்த சட்டம் உடன் திரும்பப்பெறப்பட வேண்டும்.

பயங்கரவாதம் தீவிரவாதம் என்ற போர்வையில் எமது தமிழ் இளைஞர்கள் பட்ட துன்பங்களை சிங்கள இளைஞர்கள் இன்று புரிந்து கொண்டுள்ளரன். இப்படி கூக்குரல் எழுப்பியவர்கள் நாட்டையே கொள்ளையடித்ததை அவர்கள் உணர்ந்துள்ளனர். தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதன் மூலம் சர்வதேச நல்லெண்ணம் மற்றும் ஒத்துழைப்பு கிடைக்கும் இது இலங்கையில் பல்வேறு சமூகங்களிடையே நல்லிணக்கம் - சமாதானத்துக்கான உறுதியான அடித்தளத்தை அமைக்கலாம். அத்துடன், உங்களுடன் நெருக்கமாக பணியாற்றவும் எங்கள் கூட்டணிக்கு உதவும் - என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேசமயம் சிறைகளில் 46 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் இன்றுவரை 10 - 26 ஆண்டுகள் வரை சிறையில் உள்ளனர். அனைவரும் நீரிழிவு, இதய பிரச்னைகள், புற்றுநோய், குடல் சிக்கல்கள், முதுகுவலி, மூட்டுவலி போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மோசமான உணவு - மருத்துவ கவனிப்புக்கு உள்ளாகியுள்ளனர். இதனால், பலர் சிறையில் இறந்தனர். கைதிகள் பலரின் குடும்பங்கள் சமூக, பொருளாதார மற்றும் கலாசார சீர்குலைவுகளுக்கு உள்ளாகியுள்ளனர். பல குடும்பங்கள் பிளவடைந்துள்ளன.

கைதிகளின் மேல்முறையீட்டு மனுக்கள் விசாரணையின்றி 3 - 6 மாதங்கள் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன. அரச பகுப்பாய்வாளர், நீதித்துறையினர், மருத்துவ அதிகாரிகளின் அறிக்கைகள் தாமதமாகின்றன என்றும் அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், இதில் 46 அரசியல் கைதிகளின் பெயர் விவரங்களை இணைத்துள்ளார். அதன் விவரம் வருமாறு,

**குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு மேன்முறையீடு செய்தோர்**

கதிர்காமத்தம்பி சிவகுமார் (வழக்கு இல.CA/190/2002), விக்னேஸ்வரநாதன் பார்த்தீபன் (CA/190/2002), கிருஷ்ணசாமி இராமசந்திரன் (CA /157,158/2008), வேலாயுதம் வரதராஜன் (CA325/327/2011), சந்திர ஐயர் ரகுபதி சர்மா (CA/325/327/2011), சக்திவேல் இலங்கேஸ்வரன் (HC/891/2022), செல்லத்துரை கிருபாகரன் (HC/2005/2004), சுப்பிரமணியம் மோகன் (எச்சி / சிலாபம்), சண்முகலிங்கம் சூரியகுமார் (எச் சி/2982/2010), சண்முகரத்தினம் சண்முகராஜன் (HC/147/2010), ஜோன்சன் கொலின் வலன்ரினோ (CA/292/2012), செல்லையா சதீஸ்குமார் (CA/94/2011), சச்சிதானந்தம் ஆனந்தசுதாகர் (HC/6655/ 2013), கனகசபை தேவதாசன் (CA/283 /2017, CA/413/2018), இராமநாதன் நவதேவன் (H/93/2008), வேலு யோகராசா (HC/17/2011), இராமசாமி கிருஷ்ணகாந்தன் (HC/420/2017), வீரகுமார் ராகுலன் (HC/420/2017), ஏ. எச். உமர் ஹதாப் (HC/57/2010), செல்லையா நவரத்தினம் (CA 140/151/ 2011) சின்னப்பர் பாக்கியநாதன் (CA/ 345/2017), விக்ரர் றொபின்சன் (HCV 828/2001), செபஸ்ரியன் ஜெபநேசன் பெர்னாண்டோ (HCM01,02,03/2012), தங்கவேலு நிமலன் (HC/5802/2011),

**தடுத்து வைக்கப்பட்டுள்ளோர்**

தங்கவேல் சிவகுமார் (HC/6784/2016), எட்வேர்ட் சாம் சிவலிங்கம் (HC/6784/2016), சீலன் ஆனந்தராசா (HC/6784/2016), கார்த்திகேசு சிவாஜி (HC/7080/2009), சிவலிங்கம் ஆரூரன் (HC7080/2013), குணசிங்கம் கிருபானந்தம் (HC/55/2011), கந்தையா இளங்கோ (HC/3736/2012), வைரமுத்து சரோஜா (HC/3736/2012), அஜித் நிசாந்த எதிரிசிங்க (HC/3736/2012), சிவராஜா கிருபாகரன் (HC/6233/2012), தம்பையா பிரகாஷ் (HC/6233/2012), நடேசன் குகதாசன் (HC/2848/2012), செனரத் லக்ஷ்மன்கூரே (HC/63/2014), சுப்பிரமணியம் சுரேந்திரராஜா (HC/6078/2012), யோகராஜா நிரோஜன் (HC/6078/2012), கனகரட்ணம் ஆதித்தன் (HC/ 8358/2016), மதியரசன் சுலக்சன் (HC/2491/2013), கணேசன் தர்சன் (HC/2491/2013), சிவசுப்பிரமணியம் தில்லைராஜ் (HC/01/2016), நாகலிங்கம் மதனசேகர் (HC/7807/2018), பந்துல கஜவீர (HC/3736/2012), இராசதுரை திருவருள் (HC/2491/2013) (ஐ)

## வடக்கின்...

நடைமுறைக்கு வரும்.

இந்தப்பணிமாற்றலுக்குப்பின்னர், உள்ளூராட்சி அமைச்சின் பதில் செயலாளராக பற்றிக்டிறஞ்சனும், பேரவைச் செயலகத்திற்கான பதில் செயலாளராக குகநாதனும், கட்டடங்கள் திணைக்களப் பதில் பணிப்பாளராக ஈஸ்வரராஜாவும் கடமைகளைப் பொறுப்பேற்பர் என்று வடக்கு மாகாண உயர்மட்டத் தகவல்கள் தெரிவித்தன. (ஐ-5)

## கடத்தல்....

அந்தோனி வெரங்க புஷ்பிக குற்றப் புலனாய்வுப் பிரிவின ரால் கைது செய்யப்பட் டாரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னதாக காலி முகத்திடலில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு பேருந்தில் திரும்பிக் கொண்டிருந்த அவர், கோட்டை பகுதியில் வைத்து நீல நிற ஜீப் வாகனத்தில் வந்த இனந்தெரியாத குழுவினரால் வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்டாரென சமூக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும் அவர் கடத்தப்பட்ட செய்தியில் உண்மையில்லை என குற்றப் புலனாய்வுத்துறையின் கொழும்பு தெற்கு பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அவரை பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் அவர் கோட்டை பொலிஸாரால் அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார் என்றும் தெரிவித்தனர். (ஐ)

## கொரோனாவுக்கு...

நேற்று மேலும் 154 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன்படி, இலங்கையில் மொத்தமாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 6 இலட்சத்து 65 ஆயிரத்து 248 ஆக உயர்வடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நிறைவேற்றப்...

சட்டத்தின் கீழ் அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தின ரர்.

அவசரகால நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டு, 14 நாட்களுக்குள் பாராளுமன்றத்தின் அனுமதி பெறப்படாவிட்டால் அது இரத்தாகிவிடும். எனவே, அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணையை சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் நேற்று முன்வைத்தார். மாலை 5.25 மணிவரை இது தொடர்பான விவாதம் நடைபெற்றது.

இதன்பின்னர், அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான பிரேரணைமீது எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல வாக்கெடுப்பைக் கோரினார்.

இலத்திரனியல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பன அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக வாக் களித்தன. டலஸ் அணியும் எதிராகவே வாக்களித்தது.

சிறீலங்கா பொதுஜன முன்னணியும், அரச பங்காளிக் கட்சிகளும் ஆதரித்து வாக்களித்தன. விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார உள்ளடங்கலான சுயாதீன அணிகளும் ஆதரித்து வாக்களித்தன. இலங்கை தொழிலாளர் காங்கிரசின் எம். பிக்கள் இருவரும் ஆதரித்து வாக்களித்தனர்.

ஆளும், எதிர்த்தரப்பை சேர்ந்த 42 எம்.பிக்கள் சபைக்கு நேற்றைய தினம் சமுகமளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எவருக்கும்...

“ஜனநாயக வழியிலான போராட்டங்களை ஒடுக்கக்கூடாது. அவ்வாறு ஒடுக்க முற்பட்டதால்தான் இந்த நாட்டில் ஆயுதப் போராட்டம்கூட ஏற்பட்டது. அந்தவகையில் அவசரகாலச் சட்டத்தைக் கூட்டமைப்பு கடுமையாக எதிர்க்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சோரம் போய்விட்டது எனச் சில புல்லுருவிகள் குற்றஞ்சாட்டுகின்றனர். கூட்டமைப்பு ஒருபோதும் சோரம் போகாது. முதுகு எலும்புடன் செயல்படுவோம்” - என்றார். (ஐ)

## அமைச்சு...

தலைமைப் பதவிகளை ஏற்பதற்கு தயார். அரசின் மக்கள் நலத் திட்டங்களுக்கு எதிரணியில் இருந்து ஒத்துழைப்பு வழங்குவோம் எனவும் சஜித் குறிப்பிட்டார்.(அ)

## ஊசி மூலம்...

இருதயத்தில் கிருமித் தொற்று தாக்கத்துக்கு உளளானர். அவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் அவரை போதைப் பொருளை பயன்படுத்தக் கூடாது என்று எச்சரித்திருந்தனர்.

எனினும், திங்கட்கிழமை அந்த இளைஞர் மீளவும் ஊசி மூலம் போதைப் பொருளை எடுத்துள்ளார். இதையடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

இளைஞனின் உயிரிழப்புக்கு போதைப்பொருளால் இருதயத்தில் ஏற்பட்ட கிருமி தொற்றுதான் காரணம் என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 20ஆம் திகதி புதன்கிழமை கொழும்புத்துறையை சேர்ந்த 20 வயது இளைஞர் ஒருவர் ஊசி மூலம் போதைப்பொருளை உள்ளெடுத்து உயிரிழந்தார். சமீப காலத்தில் போதைப் பொருளால் 10இற்கும் மேற்பட்டோர் யாழ்ப்பாணத்தில் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புலம்பெயர்...

நீதி,சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சகல தரப்பினரின் இணக்கப்பாட்டுக்கு அமைய எதிர்வரும் வாரம் 22 ஆவது திருத்த வரைவை சபைக்கு சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளேன். 22ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து பாராளுமன்ற தெரிவுக் குழு ஊடாக புதிய அரசமைப்பை உருவாக்க அவதானம் செலுத்தியுள்ளோம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கு காலம் காலமாக பல பிரச்னைகள் உள்ளன என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். நல்லாட்சி அரசாங்கத்தில் நீதியமைச்சராக பதவி வகிக்கையில் பல பிரச்னைகளுக்கு தீர்வு காண உரிய நடவடிக்கையை முன்னெடுத்தேன். காணாமல் ஆக்கப்பட்டோரின் காரியாலம் ஸ்தாபித்தோம். இருப்பினும் அதன் செயல்பாடு மந்தகரமாக உள்ளது. துரிதப்படுத்த ஆலோசனை வழங்கியுள்ளோம். நட்டஈடு வழங்கும் காரியாலயத்தின் செயல்பாட்டை விரிவுப்படுத்த தீர்மானித்துள்ளோம். தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினரை பிற இனத்தவர்கள் என ஒருபோதும் வேறுப்படுத்தவில்லை.

புலம்பெயர் அமைப்புகளின் தலைவர்களை சந்தித்தேன், அவர்கள் இரகசிய பேச்சுகளை முன்னெடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்கள். இரகசியமாக பேச்சு தேவையில்லை, வெளிப்படைத் தன்மையுடன் பேச்சில் ஈடுபடுவோம் என்றேன். பல்வேறு காரணிகளால் அவர்கள் பிற நாடுகளில் வாழ்கிறார்கள். பிரச்னைகளை மாத்திரம் கதைத்துக்கொண்டிருந்தால் ஒருபோதும் தீர்வு காண முடியாது. நாளைய சமூகத்தினருக்கு இந்த பிரச்னைகளை மீதமாக்க வேண்டாம். பாராளுமன்ற உறுப்பினர்கள் சாணக்கியன், சுமந்திரனிடம் குறிப்பிடுகிறேன்.

இந்த பிரச்னைக்கு நாம் தீர்வு காண்போம். புலம்பெயர் அமைப்புகளின் தலைவர்களுக்கு வெளிப்படை தன்மையுடன் பேச்சுக்கு அழைப்பு விடுத்துள்ளேன். நாட்டை முன்னேற்றுவோம். நாம் இலங்கையர்கள் என வெளிநாடுகளில் குறிப்பிடுவது வெட்கமாகவுள்ளது. பிரச்னைகளுக்கு ஒன்றிணைந்து தீர்வு கண்டு கௌரவமான சமூகம் என்பதை உறுதிப்படுத்துவோம்- என்றார். (ஐ)

## சமஷ்டி...

கூறினார்.

மேலும், இந்தப் பாராளுமன்றத்தின்மீது மக்களுக்கு நம்பிக்கையில்லை. நீங்கள் தேர்தலுக்கு செல்வதன் ஊடாக மட் டுமே உங்களின் மக்களின் நம்பிக்கையை ஏற்படுத்திய பாராளுமன்றமாக இது இருக்கும். கோட்டாபய ராஜபக்ஷவுக்கே மூன்றில் இரண்டு அதிகாரம் வழங்கப்பட்டது. அவரையே மக்கள் வெளியேறக் கூறிவிட்டார்கள். அப்படி யென்றால் அவர்கள் உங்களின் அரசுக் கான ஆணையையே மீளப் பெற்று விட்டார்கள் என்றே கூற வேண்டும்.

நீங்கள் நாட்டுக்காகத்தான் பேசுகின்றீர்கள் என்றால் தேர்தலுக்குச் செல்லுங்கள். தமிழ்த் தேசத்தை அங்கீகரிக்கும் வகையில் சமஷ்டி அரசமைப்பைக் கொண்டு வாருங்கள். அப்போது நீங்களும் நாங்களும் சேர்ந்து நாட்டை அபிவிருத்தி செய்யலாம்” - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பொலிஸாருக்கு மிரட்டல் தந்தையும் மகனும் கைது

கொழும்பு, ஜூலை 28

பொல்கஹவெல நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் தந்தையும் மகனுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தர்ப்பத்தில் சந்தேகநபர்கள் இருவரும் மதுபோதையில் இருந்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபர்களின் தாக்குதலுக்கு இலக்கான பொலிஸ் அதிகாரியொருவர் பொல்கஹவெல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொல்கஹவெல பகுதியைச் சேர்ந்த 23 மற்றும் 50 வயதான சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 - 07 - 1931



மறைவு 25 - 07 - 2022

### சின்னத்துரை வரதராஜா

*(ஓய்வுபெற்ற இலங்கை மத்திய வங்கி ஊழியர்)*

யாழ். கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும், கச்சேரியடி, கொழும்பு, சண்டிலிப்பாய், கல்வயல் சாவகச்சேரி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை வரதராஜா அவர்கள் 25.07.2022 திங்கட்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னத்துரை, மாணிக்கம் தம்பதிகளின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்ற முருகேசபிள்ளை, முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும்,மகேஸ்வரி அவர்களின் ஆருயிர்க் கணவரும்,காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை, பொன்னுத்துரை மற்றும் விஜயரட்ணம், காலஞ்சென்ற மனோன்மணி, தவலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயக்குமார், பாலகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கஜானி, கௌந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், ரவிராம் அவர்களின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற சிவபாக்கியம், கமலாம்பிகை, ஜெயரட்டினம், தையல்நாயகி, காலஞ்சென்ற தம்பு, ராஜரட்னம், குணரட்னம், பரமானந்தம், காலஞ்சென்ற அரியமலர், சிவனேசன் ஆகியோரின் மைத்துனரும்,ஈசன், உமா, ரதி, வாசன், அப்பன், சுபாஸ் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும்,பெரியதம்பி, ஜெயா, ராசாத்தி, தருமன், சிஸ்ரீ, ரவி, பவா, மஞ்சுளா, கெங்கன், சியாமளா, பாஸ்கரன், பிரிந்தா, உசாந்தி, தவானி, விந்தியா, தர்சிகா, கயுரிக்கா ஆகியோரின் அன்பு மாமாவும், லதா, கண்ணன், ஜெயந்தி, விஜயா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26.07.2022 செவ்வாய்க் கிழமை அன்று பி.ப 2:00 மணியளவில் கண்ணாடிப் பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பாலகுமார் - மகன்.**

தொடர்புகளுக்கு:
**ஜெயக்குமார் - மகன்** Mobile : +33751862733
Phone : +33142052602
**பாலகுமார் - மகன்** Mobile : +447931291679
Phone : +442087077807
**கேதீஸ்வரன் (அப்பன்) - பெறாமகன்**
Mobile : +94777249463

# டலஸ், விமல், வாசுதேவ உட்பட்ட எதிரணியினர் புதிய கூட்டணி!

கொழும்பு, ஜூலை 28

**பாராளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார உள்ளிட்டவர்களைக் கொண்ட எதிர்க்கட்சியினர் புதிய கூட்டணியை விரைவில் அமைக்கவுள்ளனர்.**

இந்தத் தகவலை முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார எம்.பி. ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய அரசுடன் நாம் இணைந்து செயற்படப்போவதில்லை. அரசின் சில பதவிகளுக்காக எதிர்க்கட்சியில் சிலருக்கு அழைப்புக் கிடைத்துள்ளது. எவ்வாறெனினும் எமது தரப்பினருக்கு அதற்கான அழைப்பு எதுவும் கிடைக்கவில்லை. அவ்வாறு அழைப்புக் கிடைத் தாலும் அரசின் எந்தவொரு பதவி யையும் பொறுப்பேற்கப் போவதில்லை.

ஆளும் கட்சிக் கூட்டத்துக்குச் சமூகமளிக்கவில்லையா? எனச் சிலர் எம்மிடம் கேள்வி எழுப்புகின்றனர். நாம் எதிர்க்கட்சியிலேயே உள்ளதால் ஆளும்கட்சிக் கூட்டத்துக்குச் சமூகமளிப்பது எப்படி? நாம் ஆளும் கட்சிக் கூட்டத்தில் பங்கேற்கமாட்டோம்-என்றார். (அ)

# பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கொரோனா மரணம் அதிகரிக்கலாம்!

## சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 28

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மீண்டும் கொரோனா பரவல் அதிகரித்தால், கொரோனா மரணங்களை தடுக்க முடியாது போகும் என பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

எனவே, கொரோனா பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக அனைத்து சுகாதாரப் பழக்கவழக்கங்களையும் பின்பற்றுமாறும் அவர் வலியுறுத்தினார்.

தற்போது, இலங்கையில் உள்ள 365 சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகங்களிலும் அன்டிஜென் பரிசோதனைக்கு தேவையான வசதிகள் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், பல இடங்களில் பி.சி. ஆர் சோதனைகளை நடத்துவதற்கு தேவையான பொருட்கள் இல்லை எனவும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

எனவே, நோயாளிகளின் எண்ணிக்கை கண்டறியப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கையை விட ஐந்து மடங்கு அதிகமாக இருக்கலாம் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எவ்வாறாயினும், அதிக எண்ணிக்கையிலான நோயாளிகள் சிறிய அறிகுறிகளுடன் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தற்போது, அவர்களை உறுதிப்படுத்த தேவையான ஆய்வக வசதிகள் இல்லை எனவும் அவர் கவலை வெளியிட்டார்.

மேலும், தற்போதைய பொருளாதார நெருக்கடியால் நோயாளிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவது அதிகரித்தால், இறப்பு எண்ணிக்கை வெகுவாக அதிகரிக்க கூடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எரிபொருள் நெருக்கடியால் இதைக் கட்டுப்படுத்துவது கடினமாக இருக்கலாம் எனவும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார். (அ)

# மாளிகைகளுக்குள் அத்துமீறி நுழைந்த 150 பேர் அடையாளம் காணப்பட்டனர்!

கொழும்பு, ஜூலை 28

ஜனாதிபதி மாளிகை, அலரிமாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகம் என்பனவற்றுக்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த 150 பேரை குற்றப் புலனாய்வு திணைக்களம் தலைமையிலான விசாரணை குழுக்கள் அடையாளம் கண்டுள்ளன.

அடையாளம் காணப்பட்டவர்களுள் ஜனாதிபதி செயலகத்தை உடைத்து சேதப்படுத்திய 55 சந்தேக நபர்களும் பிரதமர் அலுவலகத்தை சேதப்படுத்திய சந்தேக நபர்கள் 15 பேரும் உள்ளனர்.

ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரி மாளிகை என்பவற்றுக்கு சேதம் விளைவித்தமை மற்றும் அங்கிருந்த சொத்துக்களை திருடியமை தொடர்பில் 80 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் தினங்களில் இவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும், சட்டமாஅதிபருடன் கலந்தாலோசித்து பொதுச் சொத்துக்கள் சட்டம் மற்றும் தொல்பொருள் சட்டம் போன்றவற்றின் கீழ் அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைடுக்கப்படுமெனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (அ)

# மேலும் 6 இலங்கை தமிழர் தனுஷ்கோடி அருகே மீட்பு!

சென்னை, ஜூலை 28

இலங்கையில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு அங்குள்ள மக்கள் வாழ வழியின்றி அண்டை நாடுகளான இந்தியா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளுக்கு ஆபத்தான முறையில் கடலில் பயணம் செய்து அகதிகளாக இடம் பெயர்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் தலைமன்னாரில் இருந்து கிளிநொச்சி மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த இரு குடும்பத்தைச் சேர்ந்த 6 நபர்கள் படகு மூலம் நேற்று புதன்கிழமை அதிகாலை தனுஷ்கோடியை சென்றடைந்துள்ளனர்.

ஏற்கனவே 30 குடும்பங்களை சேர்ந்த 117 நபர்கள் அகதிகளாக மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்று தனுஷ்கோடி அடுத்த கம்பிபாடு பகுதியில் ஒரு குடும்பம், தனி நபர் ஒருவரை சேர்த்து 3 சிறுவர்கள் உட்பட 6 பேர் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மேலும் தஞ்சம் அடைந்தவர்களை கடலோர காவல் குழும பொலிஸார் விசாரணைக்காக மண்டபம் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.

நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இரவு 07.00 மணிக்கு தலைமன்னாரில் இருந்து குறித்த இரு குடும்பத்தைச் சேர்ந்த 6 நபர்கள் இலங்கை படகு மூலம் தனுஷ்கோடிக்கு பயணத்தை மேற்கொண்டமை குறிப் பிடத்தக்கது. (அ)

# கோட்டாவுக்கு அழைப்பாணை

கொழும்பு, ஜூலை 28

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நோட்டீஸ் அனுப்ப உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நாட்டையும் மக்களையும் இந்த நிலைக்கு இட்டுச் சென்றவர்களுக்கு எதிராக விசாரணை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையின்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேற்படி மனுக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை தனிப்பட்ட பிரதிவாதியாக பெயரிட உயர் நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அடங்கிய அமர்வு தீர்மானித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனேக அலுவிஹாரே, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட மற்றும் எல்.டி.பி.தெஹிதெனிய ஆகியோர் முன்னிலையில் விசாரணை இடம்பெற்றது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து - வழங்குபவர் உளவள துணையாளர் - யாழ் பாவாணன்



07.10 மணி: இயற்கைவழி - எஸ்.உதயசீலன் - சமுர்த்தி உத்தியோகஸ்தர்
7.15 மணி : கதைவழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை

**பகல்**
1.00 மணி : நலம்தானா - மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - வினோதய சித்தம், அம்பிகாபதி திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை - வீட்ல விசேசம்

**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : வெள்ளிடை நுட்பம் - தொழில்நுட்பம் பயன்பாடு பற்றிய நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம் - இசை நிகழ்ச்சி



10.00 மணி : நேருக்கு நேர் - அரசியல் நிகழ்ச்சி

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு